Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :204 ஆனி 06ஆம் நாள் சனிக்கிழமை 20 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# இராணுவத்தின் கொடூர பிடிக்குள் வடக்கு, கிழக்கு!

ஐ.நா. விசேட அறிக்கையாளர் காட்டமான அறிக்கை

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் கூட இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகள் தீவிர இராணுவ மயமாக்கப்பட்டுள்ளன. இராணுவத்தின் கண்காணிப்புக்களும் தீவிரமாக்கப்பட்டுள்ளன. 15

## அடுத்த வாரம் முதல் தியேட்டர்கள் திறப்பு

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் உள்ள அனைத்துத் திரையரங்குகளும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன. கொரோனாத் தொற்றுக் காரணமாக திரையரங்குகள் மறு அறிவித்தல் வரும் வரைக்கும் மூடப்பட்டிருந்தன. கொரோனாத் தொற்றுக் கட் 15

## இலங்கையின் முதலாவது சித்திரவதை வரைபடம்

இரு அமைப்புக்களால் வெளியீடு

கொழும்பு, ஜூன் 20

இலங்கையின் முதலாவது சித்திரவதை வரைபடத்தை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டமும் இலங்கையில் ஜனநாயகத் 10

## சர்வதேச சூழ்ச்சியே 2015 ஆட்சி மாற்றம்

மஹிந்த இப்படித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 20

சர்வதேச மற்றும் உள்ளூர் சூழ்ச்சியின் விளைவாகவே 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் 15

## கொரோனா 1,948

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண் 10

## வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 10 பேருக்கு கொரோனா

வவுனியா, ஜூன் 20

வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள் 10

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலனாய்வு உத்தியோகத்தர் தன்னைத்தானே சுட்டு சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 20

தேசிய புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தரான 21 வயது இளைஞர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்துள்ளார். வடம 10

## ஆணைக்குழுவில் ரிசாத் முன்னிலை

கொழும்பு, ஜூன் 20

முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகினார். 15

## நல்லிணக்கம் வேண்டுமென்றால் அரசியல் தீர்வு மிகவும் அவசியம்

சர்வதேச நாடுகள் இதில் உறுதி என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 20

இந்த நாடு சுபீட்சம் அடைய வேண்டுமென்றால், இந்த நாடு நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்றால் ஓர் அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். கொழும்பு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்றிரவு அவர் வழங்கிய நேர்காணலி 15



## வடமராட்சி கிழக்கு மணல் பிரச்சினை

## பொலிஸாரின் தலையீட்டால் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

மண் விநியோகத்தில் தங்கள் பகுதியைச் சேர்ந்த வாகனங்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்று தெரிவித்து வடமராட்சி கிழக்கு, குடத்தனை மக்கள் மேற்கொண்ட போராட்டம் பருத்தித்துறைப் பொலிஸாரின் தலையீட்டால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதி மக்கள் மணல் விநியோக மறியல் போராட்டத்தில் நேற்று 15

## குருநாகலில் பரப்புரையை ஆரம்பிக்கிறது "மொட்டு"

கொழும்பு, ஜூன் 20

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் அதன் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ 10

## புதிய நாடாளுமன்றில்

## கோத்தா அரசுக்கு ஆதரவா? இன்னும் முடிவெடுக்கவில்லை

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷ அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அந்த அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை முடிவு எதனையும் எடுக்கவில்லை.

இவ்வாறு தமிழ்த் 15

## நாகபூசணி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. 15

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் 54 கிலோ கஞ்சா சிக்கியது

மன்னாரைச் சேர்ந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 54 கிலோ 740 கிராம் கஞ்சா நெடுந்தீவுக்கு அருகே வைத்துக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கஞ்சாவைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் இருவர் கைது 15

## வாளேந்திகள் இருவர் படையினரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டுப் பகுதியில் வாள்களுடன் இளைஞர்கள் இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

அந்தப் பகுதியால் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை இராணுவத்தினர் வழி 15

## அக்கராயன் மருத்துவமனை முன்பாக நேற்று போராட்டம்

கிளிநொச்சி, ஜூன் 20

அக்கராயன் குளம் பிரதேச மருத்துவமனையை கொரோனா மருத்துவமனையாக மாற்ற வேண்டாம் எனவும் பொருத்தமான வேறு மருத்துவமனையைத் தெரிவு செய்யுமாறும்கோரி நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் குளம் பிரதேச மருத்துவமனையை வடமாகாண கொரோனா மருத்துவமனையாக மாற்ற 15

# பொருளாதார புத்தெழுச்சிக்கு மத்திய வங்கி நடவடிக்கை!

## ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிக்கை

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து மத்திய வங்கி வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் சில நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது:

கொவிட் 19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள வியாபாரத்துறைக்கு 150 பில்லியன் ரூபா அதாவது 15 ஆயிரம் கோடி ரூபா மீள் நிதியீட்டு வசதிகளை வழங்குவது அதில் ஒன்றாகும். இந்த நிதியானது அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஊடாக வியாபாரத்துறைக்கு பகிர்ந்தளிக்கப்படும். அதற்காக அறவிடப்படும் வட்டி 4 வீதமாகும். கடன் வழங்கலுக்காக வர்த்தக வங்கிகளுக்குத் தேவையான நிதி ஒரு வீத சலுகை வட்டி வீதத்துக்கு மத்திய வங்கியினால் வழங்கப்படும். கடந்த காலப் பகுதியில் பல்வேறு வியாபாரத் துறைகளினால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்காக பெரும் நிதியைச் செலுத்த வேண்டியுள்ளது. அவற்றை பிணையாக வைத்துக் கொண்டு வீழ்ச்சியடைந்துள்ள வியாபாரத்துறைகளுக்கு நிதி வசதிகளை வழங்குமாறு ஜனாதிபதி மத்திய வங்கிக்கு பணிப்புரை விடுத்தார்.

அந்த வகையில் வர்த்தக வங்கிகளுக்கு பொறுப்புறுதியின் அடிப்படையில் சலுகை வட்டியின் கீழ் நிதியளிப்பதற்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிதிச்சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. இது தவிர நிர்மாணத்துறைக்கு தனியான கடன் முன்மொழிவு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நிர்மாணத்துறை நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய நிதிக்குச் சமனாக அரசாங்கம் வெளியிடும் உத்தரவாதத்தின் அடிப்படையில் சலுகை வட்டிக்கு கடன் வழங்குவது அதன் நோக்கமாகும்.

பொருளாதார புத்தெழுச்சிக்காக மத்திய வங்கி மேற்கொண்டுள்ள தீர்மானங்களின்படி வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புக்காக சட்ட ரீதியான ஒதுக்கீட்டு விகிதம் ஜூன் 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் 2 வீதம்வரை குறைக்கப்பட்டுள்ளது. அதன் பெறுபேறாக 115 பில்லியன் ரூபா அதாவது 11 ஆயிரத்து 500 கோடி ரூபா மேலதிக திரவத்தன்மை உடனடியாக கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய வகையிலான நிதி அளவு நிதிச்சந்தைக்கு விடுவிக்கப்படும். ஒதுக்கீட்டு விகிதத்தை குறைப்பது வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் செலவை குறைப்பதற்கு அடிப்படையாக அமையுமென்பதால் பொருளாதாரத்தின் கடன் பாய்ச்சல் விரிவடையும். கடன் செலவு குறைவடைவதன் நன்மைகள் வியாபாரத் துறைக்கும் குடும்பங்களுக்கும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைதல் மற்றும் லீசிங் நிறுவனங்களின் முறைகேடான நடவடிக்கைகளுக்கு மத்தியில் செயலற்று இருப்பது குறித்து ஜனாதிபதி மத்திய வங்கி அதிகாரிகளை எச்சரித்திருந்தார். அதற்குப் பதிலாக மத்திய வங்கி ஆளுநரினால் நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்டறிவதற்காக மூன்றுபேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர இக்குழுவின் தலைவராகச் செயற்படுகின்றமையுடன், இலங்கை மத்திய வங்கியின் சட்டத்துறைப் பணிப்பாளர் கே.ஜி.பி.சிறிகுமார மற்றும் மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களை முகாமைத்துவம் செய்யும் பிரிவின் பணிப்பாளர் ஜே.பி.கம்லத் ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவர் - என்றுள்ளது. (ஐ)

# பாடசாலை போக்குவரத்துச் சேவை தொடர்பில் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 20

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீள ஆரம்பமாகவுள்ள நிலையில், மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளை முகாமைத்துவம் செய்தல் குறித்து கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீரவினுடைய பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் போக்குவரத்து அதிகாரிகள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், இலங்கை போக்குவரத்துச் சபை, அகில இலங்கை பாடசாலை சேவை பஸ் உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போதுள்ள சூழலில் அனைத்துத் தரப்பினரும் ஏதேனுமொரு பின்னடைவுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. இவ்வாறான நிலையில் இலாபநோக்குடன் மாத்திரம் செயற்படாது சமூகத்தின் தேவைக்கு முதலிடம் வழங்கி மாணவர்களுக்கு காணப்படும் பிரச்சினைகள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று தெரிவித்த கல்வி அமைச்சர், விசேடமாக சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அனைத்து சுகாதார ஆலோசனைகளையும் உள்ளடக்கிய மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கும்போது: பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் நிறைவடையும் நேரங்கள் மூன்று பிரிவுகளாகக் காணப்படுகின்றன. இதனால் தமக்கு மாணவர்களை ஏற்றிச் செல்வதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதால் இதனை இரு நேரங்களாக மாற்றுவது தொடர்பில் ஆராயுமாறு கோரிக்கை விடுத்தனர். இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மாத்திரமே மாணவர்களை ஏற்றிச் செல்லல், சமூக இடைவெளியைப் பேணுதல், வான் மற்றும் பஸ் என்பவற்றில் கிருமி நீக்கம் செய்தல், முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுவதற்கு அனைத்து போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளும் இதன் போது இணக்கம் தெரிவித்தனர். (ம-ஐ)

# சிறிகொத்தா அல்ல ஆட்சிதான் இலக்கு

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

**கொழும்பு, ஜூன் 20**



**ஐக்கிய தேசியக் கட்சி பொதுத்தேர்தலில் போட்டியிடுவது சிறிகொத்தாவைக் கைப்பற்றுவதற்கல்ல, ஆட்சியை கைப்பற்றுவதற்கே என்று கூறியிருக்கும் அக்கட்சியின் உபதலைவரான ரவிகருணாநாயக்க தேர்தலில் பிரதான போட்டி ஆளும் பொதுமக்கள் முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலேயே ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.**

மேலும் தெரிவித்த அவர்:

ஐ.தே.கவைச் சேர்ந்த குழுவினர் கட்சியிலிருந்து விலகிச்சென்று வாடகை வீட்டில் இருந்து கொண்டு எம்மை விமர்சிப்பது கவலையளிக்கின்றது. ஐ.தே.க பலம் வாய்ந்த விருட்சம் அதிலிருந்து இலைகள் விழுவதால் முழு மரமே பட்டுப்போய்விடாது. புதிய துளிர்களைக் கொண்டு மீண்டும் அது உயர்ந்து வளர்ந்து வரும். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் வருமானப் பிரச்சினை அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு நாங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம். ஆனால் அரசு இது தொடர்பில் முறையான செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரியவில்லை. கொரோனா வைரஸ் பரவலினால் செலுத்த வேண்டியுள்ள வங்கிக் கடன் மற்றும் ஏனைய கடன்களை செலுத்துவதற்காக ஆறு மாத காலம் அவகாசம் வழங்குவதாக அரசு தெரிவித்திருந்தபோதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்கு முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயரத்னவின் கொலையே சான்றாகும்.

உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்காக கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தாலும், பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் வரையாவது பிற்போடுமாறு உயர்தர பாடத்திட்டம் தொடர்பான விளக்கமுடையவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இது தொடர்பில் கல்வியமைச்சு கவனம் செலுத்தி இந்தப் பாடத்திட்டம் தொடர்பில் தேர்ச்சி பெற்றவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு உயர்தர மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானம் எடுக்க வேண்டும். இணைய வழி கல்வியும் வெற்றிகரமான முறையில் இடம்பெறாமையினால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் - என்றார். (ப)

# 13 ஆசிரியர்கள் தேர்தலில்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு உட்பட்ட 13 ஆசிரியர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என்று கல்வி அமைச்சின் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

2020ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில், வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் 13 பேர் கல்வி அமைச்சில் அதற்கான அனுமதியை கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி முதல் பெற்றுள்ளனர். போட்டியிடும் ஆசிரியர்கள் வெற்றியீட்டாவிடில் தேர்தல்முடிவுற்றதும்மீண்டும் பணிக்குத் திரும்புவர். தேர்தலுக்காக விடுமுறை பெறும் அரச ஊழியர்களின் விடுமுறைக் காலம் சம்பளம் அற்ற விடுமுறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-105)

# ஞானசார தேரருக்கு பாதுகாப்பு வழங்குக!

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்குமாறு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் அதிகாரசபைக்கு ஜனாதிபதி ஆணைக் குழுவினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாட்சியம் அளித்தமையால் ஞானசார தேரருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று குறிப்பிட்டு ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (ப)

# அரசமைப்புக்கு எதிரான எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடோம்

## அரசு திட்டவட்டம்



கொழும்பு,ஜூன் 20

நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில் எந்தவொரு நாட்டுடனும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தயாரில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது முன்வைக்கப்பட்ட எம்.சி.சி. உடன்படிக்கைக்கு நாம் எதிர்ப்பை வெளியிட்டிருக்காவிட்டால் அது கைச்சாத்திடப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கும். கடந்த ஆட்சியின் போது இவ்வாறு பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கூட தீர்மானம் முன்வைக்கப்பட்டிருந்தது.

ஆனால், எமது அரசு அவ்வாறு செயற்படாது. நாட்டு மக்களிடம் மறைத்து, ஒளிவுமறைவில் எந்தவொரு விடயங்களையும் செய்ய மாட்டோம்.

எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை எமக்கு இன்னும் கிடைக்கவில்லை. எனினும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் முன்வைக்கப்பட்ட குறித்த உடன்படிக்கையில் உள்ள சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணானவையாக உள்ளன என்று இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, எக்காரணம் கொண்டும் அரசமைப்பையும், உள்நாட்டு சட்ட, திட்டங்களையும் மீறும் வகையில் எந்தவொரு நாட்டுடனும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதில்லை என்ற முடிவை அரசு எடுத்துள்ளது.

எம்.சி.சி. உடன்படிக்கையில் எவரும் கைச்சாத்திடவில்லை. அது முடிவடைந்து விட்டது. திருத்தங்கள் சகிதம் புதிய ஒப்பந்தங்கள் வந்தால் அதுபற்றி பரிசீலிக்கலாம். அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படையாகவே இடம்பெறும். அரசமைப்பை மீறும் வகையில் அரசு செயற்படாது.

அதேவேளை, கொவிட் பிரச்சினை மற்றும் தேர்தலே தற்போது முக்கிய விடயங்களாக உள்ளன என்றே அமெரிக்கத் தூதுவர் நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், எம்.சி.சி. உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு தேர்தல் முடிவடையும் வரை தூதுவர் காத்திருப்பதாக திரிபுபடுத்தப்பட்டு செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (க-44)

## உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்தவருக்கு சூரியனை விமர்சிக்க அருகதையில்லை

### துரைராசசிங்கத்தை போட்டுத் தாக்கினார் ஆனந்தசங்கரி

மட்டக்களப்பு, ஜூன் 20

உயிருக்குப் பயந்து ஓடி ஒளிந்த கோழைகளுக்கு உதயசூரியனைப் பற்றிக் கதைப்பதற்கு அருகதையில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளரும், தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமான துரைராஜசிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசை சார்ந்தவர்கள் உதய சூரியன் சின்னத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர் என ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் ஆனந்த சங்கரி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

2004ஆம் ஆண்டு பதவி மோகம் கொண்ட ஒரு சிலர் செய்த கூட்டுச் சதியால், எமது கட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடியான சம்பவங்களை நேருக்கு நேர் நின்று எதிர்க்க துணிவில்லாமல், சம்பந்தப்பட்டவர்களிடம் பதவிக்காக சரணாகதி அடைந்தவர்களும் உண்டு. துரைராஜசிங்கத்தைப்போல கட்சியின் மத்திய செயற்குழுப் பதவியில் இருந்து இராஜினாமா செய்து விட்டு, ஓடி ஒளிந்து கொண்டவர்களும் உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரின் கட்சியைச் சார்ந்த ஒரு வேட்பாளர், ஒரு தேசியக் கட்சியில் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர் என்பதை மறந்து விட்டாரா? அதுமட்டுமல்ல அக் கட்சியின் வேட்பாளர்களில் ஒரு சிலர் ஜனநாயகத்துக்கு விரோதமான மனித உரிமைகளை அப்பட்டமாக மீறியவர்கள் என்பது அவர் அறியாததா? நிலைமை இவ்வாறு இருக்கும்போது தம்பி துரைராஜசிங்கம் கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல் எறிவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். நாங்கள் திருப்பி எறிந்தால் அவர் தாங்கிக் கொள்ளமாட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ப)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை

**மன்னார் மாவட்டத்தில்**

மாலுவாடி, மற்றும் New Silk Road Aquatic Company PVT (Ltd) ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## கொரோனாவால் இலங்கையர்கள் 21 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 20

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி, வெளிநாடுகளில் பணியாற்றும் 21 இலங்கையர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

மார்ச் மாதம் தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கை பணியாளர்களான 21 பேர் உயிரிழந்துள்ளார் என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மத்திய கிழக்கு, கிழக்காசியாவைச் சேர்ந்த 17 நாடுகளில் தொழில் நிமித்தம் சென்ற இரண்டாயிரம் பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (க)

## கூட்டமைப்புடன் முன்னாள் போராளிகள் இணைவது மாவீரருக்கு செய்யும் துரோகம்

### சிவசக்தி ஆனந்தன் சீற்றம்

வவுனியா, ஜூன் 20

முன்னாள் போராளிகள் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தையும், அதன் தலைவரையும் கொச்சைப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவார்களாகவிருந்தால் அதை அந்த தலைவருக்கும், அவர்களுடன் இணைந்த மாவீரர் குடும்பங்களுக்கும் அவர்கள் இழைக்கின்ற பெரியதொரு துரோகத்தனமாகத் தான் நான் பார்க்கின்றேன் எனதமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னாள் போராளிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும், தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயும் முரண்பட்ட கருத்துக்கள் நிலவிக் கொண்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளது போராட்டத்தையும், தலைவர் பிரபாகரன் அவர்களையும் சுமந்திரன் கடந்த நாடாளுமன்றக் காலத்தில் மிக மோசமான முறையில் விமர்சனம் செய்திருந்தார். குறிப்பாக அவர்களது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம். கொடூரமானவர்கள். அவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியமைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. பிரபாகரனையோ அல்லது ஆயுதப் போராட்டத்தையோ தாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பகிரங்கமாகத் தெரிவித்த பிற்பாடு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தங்களுடைய தலைவரையும், அந்த தியாகங்களையும் கொச்சைப்படுத்துகின்ற ஒரு கட்சியோடு இணைந்து கொள்வார்களாக விருந்தால் அது அந்தத் தலைவருக்கும் அவர்களுடன் இணைந்த மாவீரர் குடும்பங்களுக்கும் அவர்கள் இழைக்கின்ற பெரியதொரு துரோகத்தனமாகத் தான் நான் பார்க்கின்றேன்.

2009 க்குப் பிற்பாடு முன்னாள் போராளிகளில் எத்தனையோ துறை சார்ந்தவர்கள் உள்ளார்கள். அவர்களில் மிக அரசியல் அனுபவம் பெற்றவர்கள் உள்ளார்கள். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபை, நாடாளுமன்றம் என்பவற்றில் சந்தர்ப்பம் வழங்கியிருக்கலாம். அல்லது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக எதுக்குமே பிரயோசனமில்லாதவர்களை கடந்த 20 வருடமாக நியமித்துள்ளார்கள். போராளிகளில் அக்கறை இருந்தால் போராளிகளுக்கு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம். எதுவுமே செய்யாமல் அவர்களது தியாகத்தை மட்ட ரகமாக கொச்சைப்படுத்தி விட்டுத் தற்போது ஒரு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இவர்களுக்கு முன்னாள் போராளிகள் மீது அதிக பாசம், பற்று இருப்பதாகக் காட்டுவது என்பது இவர்களது பொய்யும் புரட்டுமான ஒரு பிரச்சாரம் - என்றார். (ப-18)

## மூன்று மாதங்களில் ரூ.1,500 சம்பள உயர்வு

பொதுத்தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்ற பின்னர் மூன்று மாதங்களுக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என்று இந்த அரசு கூறியது. அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா நாள் சம்பளமாகப் பெற்றுக் கொடுக்கப்படும் என சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு அவர் பிரதமரான பின்னர் மூன்று மாதங்களுக்குள் நிச்சயம் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படும்.


பெருந்தோட்ட மக்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்தனர். இந்தமுறையும் அவர் தலைமையிலான கூட்டணிக்கே வாக்களிப்பார்கள். மலையக மக்களுக்காக சிறைச்சாலை செல்வதற்குக் கூட நான் தயாராகவே இருக்கின்றேன்-என்றார். (க-44)

# அடுத்த திங்களிலிருந்து யாழில் கொரோனா வாரம்

## நடைமுறைப்படுத்துகிறது சுகாதாரத் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் இது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை கொரோனா வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினர் சகல சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகள் ஊடாகவும் இதைச் செயற்படுத்துகின்றனர்.

இதன்பிரகாரம் நாளைமறுதினம் திங்கட்கிழமை அனைத்து சந்தைகளிலும் 23 ஆம் திகதி அனைத்து கோவில்களிலும், 24 ஆம் திகதி அரச, தனியார் நிறுவனங்களிலும், 25 ஆம் திகதி, பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், 26 ஆம் திகதி திருமண மண்டபங்களிலும், 27 ஆம் திகதி உணவகங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்களிலும் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கொரோனா காலத்தில் சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுகாதார விதிமுறைகளை இந்த அமைப்புகள் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனவா என்பதைக் கண்டறியும் நோக்குடன் கொரோனா வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

டெங்கு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது அவற்றைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது போன்று கொரோனா வாரத்தில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



## கடைகள் அமைந்திருந்த இடத்தில் மரக்கன்றுகள்

மன்னார், ஜூன் 20

மன்னார் நகர் மத்திய பகுதியில் அகற்றப்பட்ட வியாபார நிலையங்கள் அமைந்த பகுதியில் மன்னார் நகர சபையினர் நிழல்தரும் மரக்கன்றுகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் நட்டனர்.

மன்னார் நகரை அழகுபடுத்தும் வகையில் அவற்றை நட்டோம் என்று சபையினர் தெரிவித்தனர்.

மன்னார் நகர சபைத் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகர சபையின் செயலாளர், நகர சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (த-56)



விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக

## வீட்டுத்தோட்ட களப்பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாண மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையினர் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வீட்டுத்தோட்ட களப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை, காரைநகர், தொல்புரம் பகுதிகளைச் சேர்ந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கே விவசாய போதனாசிரியர்களால் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் பயிற்சிகள் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

வீட்டுத்தோட்ட பயிர் தெரிவு முறை, பராமரிப்பு முறை, இயற்கை பசளையிடும் முறை,நோய் கட்டுப்பாட்டு முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## மோ.சைக்கிளை எரித்த இருவர் நேற்றுக் கைது

வவுனியா, ஜூன் 20

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் வாள்களுடன் சென்று மோட்டார் சைக்கிளை தீயிட்டு எரித்த சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வீட்டு வளவுக்குள் புகுந்த நபர்கள் வீட்டின் கேற், ஜன்னல், கதவு என்பனவற்றை வாளால் தாக்கி சேதப்படுத்தியிருந்தனர்.

அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு எரித்திருந்தனர். அங்கிருந்து புறப்படும்போது அந்த வீட்டில் வளர்க்கப்பட்ட விலையுயர்ந்த இரண்டு நாய்க் குட்டிகளையும் திருடிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வரும் வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் இரு இளைஞர்களை கைதுசெய்துள்ளனர். அவர்கள் விசாரணைக்கு முன்னெடுத்துள்ளனர். மேலும் சிலருக்கு இந்தச் சம்பவத்துடன் தொடர்புள்ளதாகவும் அவர்களையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-18)

## கொரோனாவால் இலங்கையர் சவுதியில் சாவு

கரணவாய், ஜூன் 20

வடமராட்சி இமையாணன் மேற்கைச் சேர்ந்த குடும்பத் தலைவர் கொரோனா நோய்த்தாக்கத்தால் சவுதியில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமையாணன் மேற்கைச் சேர்ந்த அரசன் செல்வராஜா( வயது 51) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் சவுதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும்போது சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

இவர் மூன்று வருடங்கள் அங்கு வேலை செய்துவிட்டு சொந்த ஊரான இமையாணன் மேற்குக்கு விடுமுறையில் வந்து ஐந்து மாதங்களுக்கு முன்னர் சவுதிக்கு திரும்பியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சவுதியில் இவர் வேலைசெய்த நிறுவனம் அவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துவிட்டார் என்ற தகவலை அவருடைய குடும்பத்துக்கு அறிவித்துள்ளது. (த-108)

## நாயால் விபத்து ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 20

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் காயமடைந்தார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இளைஞனே ஏ-9 வீதி தென்மராட்சியில் இவ்வாறு விபத்தில் சிக்கி காயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த 28 வயது நபரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தனியார் கல்வி நிலையங்களும் இயங்குவதற்குத் தயாராகின்றன

சாவகச்சேரி, ஜூன் 20

நாட்டில் உள்ள பாடசாலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாவதையடுத்து தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களும் வகுப்புகளை ஆரம்பிக்க ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றன.

அதற்கு முன்னேற்பாடாக தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாக. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

கொரோனா தொற்று ஏற்படுவதை தடுக்க நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகள் போன்றே தனியார் கல்வி நிறுவனங்களும், இயங்க தடைவிதிக்கப்பட்டது.

பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்களும், 29 ஆம் திகதி திறக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தனியார் கல்வி நிறுவனங்கள் நிறுவன வளாக துப்புரவு மற்றும் கிருமித் தொற்று நீக்கம் போன்ற செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. (த-9)



## ஞான வைரவருக்கு சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞான வைரவப்பெருமானின் சங்காபிஷேகம் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரி துணை முதல்வர் சு.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு இடர்கால நிலையைக் கருத்திற் கொண்டு மிக எளிமையாக நடைபெற்றது. (த-20)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டுப் பெயரை நாறடித்தல்

“2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப்போட்டியில் பணத்துக்காக இலங்கை அணி கிண்ணத்தை தரைவார்த்தது” என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் மொட்டுக் கட்சியின் முக்கிய புள்ளியும், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகே. இப்படி ஒரு ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றமை தொடர்பில் எந்தவித ஆதாரங்களையும் முன்வைக்காமல், தானே நேரில் நின்று அந்தச் சதியைப் பார்த்தவர்போல துடிக்கப் பதைக்கச் சொல்லி சர்வதேச ரீதியில் மிகப்பெரிய அதிர்வை உண்டாக்கியிருக்கிறார்.

சாதாரணமாக ஒரு நாட்டின் விளையாட்டு அணி பற்றி அதற்கு எதிரான நாடுகளே ஆட்ட நிர்ணய சதி, முறையற்ற பந்து வீச்சு, ஊக்க மருந்துப் பாவனை என்று தமது தோல்வியை மறைக்கப் புரளிகளைக் கிளப்பி விடுவதுண்டு. அப்படியான புரளிகளில் ஒரு சிலவே ஆதாரத்தோடு வெளிப்படுத்தப்பட்டு, உண்மையென நிரூபிக்கப்பட்டு, உரியவர்களுக்குத் தண்டனையும் கிடைத்துள்ளது. பெரும்பாலான புரளிகள் பொறாமையின்காரணமாகப்புனையப்பட்டவையே. நிலைமை இப்படியிருக்க, தன் சொந்த நாட்டுக் கிரிக்கெட் அணி மீது, அதுவும் ஒரு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை ஏனைய நாடுகளும், கிரிக்கெட் அபிமானிகளும் மிக முக்கியத்துவம் கொடுத்தே பார்க்கின்றனர். ஆனால் அந்த முக்கியத்துவத்தின் அடுத்த கட்டமாகச் சர்வதேசக் கிரிக்கெட் பேரவை , இது தொடர்பான விசாரணைகளையும் தொடங்கக்கூடும். அப்போது இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த சங்கா, மஹேல உள்ளிட்ட பிரபலமான வீரர்களும் விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் எந்தத் தவறும் செய்திராவிட்டாலும், இப்படியொரு ஆட்ட நிர்ணயச் சதியே இடம்பெற்றிராவிட்டாலும், அதுகுறித்த விசாரணைக்கு உட்படுத்தப்படுவதென்பது அவர்கள் இத்தனை வருடமும் இலங்கை கிரிக்கெட்டுக்காக செய்திருந்த அத்தனை அர்ப்பணிப்புக்கும் அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

ஆனால் அதற்காக மஹிந்தானந்த சொல்வது சரியா, தவறா என்ற முடிவுக்கு வர சர்வதேச விசாரணைகள் தேவையில்லையென்று அர்த்தமில்லை. சரியான வகையில் உடனடியாக இதுகுறித்து விசாரித்து இலங்கையின் கிரிக்கெட்டுக்கு ஏற்பட்ட களங்கம் துடைக்கப்படத்தான் வேண்டும். இத்தகைய நிலையில், சில சந்தேகங்கள் எழுவதும் தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. 2011 ஆம் ஆண்டு நடந்த இந்த ஆட்ட நிர்ணய சதியை, 9 வருடங்கள் கழிந்த பின்னர் இப்போது ஏன் மஹிந்தானந்த அளுத்கமகே போட்டுடைக்க வேண்டும்? அதுவும் கொரோனா அச்சத்தின் ரேகைக்குள் , பயந்து பயந்து தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், சம்பந்தமேயில்லாமல் கிரிக்கெட் சதியை ஏன் மஹிந்தானந்த இழுக்க வேண்டும்?, அப்படி இந்தச் சர்ச்சையைக் கிளப்புவதால் மஹிந்தானந்தவுக்கு என்ன இலாபம்? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் கிடைத்தாலேயே இதன் உண்மைத்தன்மை வெளித்தெரிய வரும்.

ஆயினும் ஒன்றை மாத்திரம் சொல்லலாம். கொரோனாப் பாதிப்பு, பொருளாதாரச் சரிவு, இராணுவ ஆட்சி பற்றிய மக்களின் அச்சம் என்பவற்றால் தம்முடைய வாக்கு வங்கி சரிவதால், மக்களை இன்னொரு பக்கம் திசை திருப்பவே இப்படியொரு ‘மல்ரிபரலை’ அடித்துவிட்டிருக்கிறார் மஹிந்தானந்த என்ற முடிவுக்கு வேண்டுமானால் நாம் வரமுடியும். அரசியலுக்காக சொந்த நாட்டின் நற்பெயரைக் கெடுப்பதற்குக்கூடத் தயங்காதவர்கள், எந்தப் பொய்யையும் சொல்லத் தயங்காதவர்கள் அடுத்து வரும் தேர்தலில் வென்றுவிட்டால் என்ன நடக்கும்? இன்னும் இலங்கையின் பேரை நாறடிப்பார்களே தவிர நல்லதொன்றும் செய்துவிடப்போவதில்லை.



# தண்ணீர் இல்லாமல் கால்நடைகள் பாதிப்பு

## மன்னார் பண்ணையாளர்கள் கவலை

**மன்னார்.ஜூன் 20**

**மன்னார் மாவட்டத்தில் கால்நடைகள் குடிப்பதற்காக வெனக் கட்டுக்கரையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது வழமை ஆனால் இன்னும் தண்ணீர் திறக்கப்படவில்லை இதனால் கால்நடைகள் குடி தண்ணீர் இன்றி அவதிப்படுகின்றமையுடன் நோய்வாய்ப்படும் நிலையில் உள்ளன என பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



மன்னார் மாவட்டத்தில் சுமார் அறுபதாயிரத்துக்கும் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. இவை மேலும் பாதிப்படைய முன் கால்நடைகளுக்கான தண்ணீரைத் திறந்துவிடுமாறு பண்ணையாளர்கள் மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் கள். இது தொடர்பாக மன்னார் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நடராசா யோகராசாவிடம் கேட்டபோது;
“கால்நடைகளுக்கான குடிதண்ணீர் திறப்பது தொடர்பாக பண்ணையாளர்கள் கேட்டிருந்தார்கள். தற்போது சிறுபோக விவசாயச் செய்கைக்கு மாத்திரமே தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலதிகமாக தண்ணீர் விநியோகம் செய்வதாயின் மாவட்டச் செயலாளரின் அனுமதி தேவை. மன்னார் மாவட்டச் செயலாளருடன் கலந்தாலோசனை செய்த பின் எதிர்வரும் திங்கட்கிழமை கால்நடைகளுக்கான தண்ணீர் திறப்பது பற்றி முடிவு செய்யப்படும்” - என்றார். (ஐ-213)

# ஏற்று நீர்ப்பாசனத்தை சீராக்கித் தாருங்கள்

## விசுவமடு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 20
ஏற்றுநீர்ப்பாசன முறையில் விவசாயம் மேற்கொள்ளும் முல்லைத்தீவு விசுவமடு விவசாயிகள், தாம் சில வருடங்களாக ஏற்று நீர்ப்பாசனம் மூலமாக போதியளவு தண்ணீரைப் பெறமுடியாதுள்ளதாகவும் நீர்ப்பம்பிகளைத் திருத்தித் தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.
தம்மிடம் 5 நீர்ப்பம்பிகள் இருந்தன. அவற்றில் இரண்டு செயலிழந்துவிட்டன. வடக்கு மாகாண சபை முன்னர் 20 இலட்சம் ரூபா பெறுமதியான நீர்ப்பம்பிகளை வழங்கியிருந்தது. எனினும், தற்போது அவற்றின் மூலமாக ஏற்றுநீர்ப்பாசனம் செய்யமுடியாதுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.
இதனால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம் என்று கூறும் விவசாயிகள், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர். (த-113)

# இளைஞனுக்கு கத்தி வெட்டு

## தருமபுரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 20
கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் இளைஞன் ஒருவர் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இது இடம்பெற்றிருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கத்தியால் வெட்டியவர் கத்தியை வாயில் கவ்வியபடி வீதியால் சென்றார் என்றும் அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.
காயமடைந்தவர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-113)

# 1,000 ரூபா ஊதியம் வியாழனன்று பேச்சு

கொழும்பு, ஜூன் 20
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பான பேச்சு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் முன்னாள் மத்திய மாகாண அமைச்சருமான பொதுமக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்றது.
பெருந்தோட்டத் துறையின் முக்கியஸ்தர்கள், பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரண, முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான், புதிய பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான், சிரேஷ்ட உறுப்பினரும் சட்டத்தரணியுமான இராஜதுரை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.
பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பாக இடம்பெற்ற இந்தப் பேச்சில் ஒரு சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது. அடுத்தகட்டப் பேச்சு எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது - என்றார். (ம)

# புதூர் நாகதம்பிரானில் சுகாதார ஏற்பாடுகளை செயலகம் கவனிக்கும்

வவுனியா, ஜூன் 20
வவுனியா புதூர் நாகதம்பிரான் கோவில் திருவிழாவில் சுகாதார நடைமுறைகள், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி போன்றன மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.
அங்கு பக்தர்கள் வருகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாகத்தினர் உட்பட 80 பேருக்கு மட்டுமே பொங்கலில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
நேர்த்திக்கடன்களை தங்களுடைய பகுதியிலுள்ள கோவிலில் மேற்கொள்ளுமாறும் மாவட்டச் செயலர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.
பிற பகுதிகளிலிருந்து யார் வந்தாலும் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். (கு-110,18)

# சிறுமியை சீரழித்தவருக்கு விளக்கமறியல்

பதின்மூன்று வயது சிறுமியை பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்று வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

தென்மராட்சி கிழக்கில் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் பெற்றோர் கொடுத்த முறைப்பாட்டுக்கமைய கொடிகாமம் பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞரைக் கைது செய்திருந்தனர்.

விசாரணையின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அதன்போது எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமியை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்து மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (த-9)

*சனிக்கிழமைகளில்*

# அஞ்சல் ஊழியருக்கு 80 சதவீதச் சம்பளம்!

**கொழும்பு, ஜூன் 20**

**தபால் திணைக்களம் நட்டத்தில் இயங்கி வரும் நிலையில் அதனை எதிர்கொள்வதற்காக சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.**

இருப்பினும் தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்கள் திறக்கப்பட்டாலும், அதன் ஊழியர்களுக்கு அன்றைய தினம் மாத்திரம் 80 சதவீத சம்பளத்தை வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பபில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் 19 வைரஸ் பரவலையடுத்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் தபால் திணைக்களத்தை நடத்திச்செல்வதிலும் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தபால் சேவை ஊழியர்களின் ஊதியத்தில் குறைப்பைச் செய்ய வேண்டிய நிலையேற்பட்டிருப்பதுடன், அது ஒரு நட்டத்தில் இயங்கும் திணைக்களமாகவும் மாறியிருக்கிறது.

எனவே இந்நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்காக சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அதனைத் தபால்சேவை ஊழியர்கள் தொழிற்சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடல்களின் ஊடாக சனிக்கிழமை அஞ்சல் அலுவலகங்களைத் திறக்குமாறும், எனினும் அன்றைய தினம் மாத்திரம் தமது சம்பளத்தில் 20 சதவீதக் குறைப்பைச் செய்யுமாறும் தொழிற்சங்கம் ஓர் உடன்பாட்டிற்கு வந்திருக்கிறது - என்றார். (ஐ)

# இரட்டை நாக்கு அரசியலையே வெளிப்படுத்துகிறது கூட்டமைப்பு

*சிறிகாந்தா காட்டம்*

யாழ்ப்பாணம், ஜூன் 20

கோத்தாபய ஜனாதிபதியாக வந்தால் வெள்ளை வான் கலாசாரம் மீண்டும் வந்துவிடும் என்று கடுமையாக விமர்சித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றால் அவருக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறி வருகின்றனர். இந்தச் செயற்பாடானது இரட்டை நாக்கு அரசியலையே வெளிக்காட்டுகின்றது என தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தால் வெள்ளைவான் கடத்தல் ஆரம்பமாகும் என்று சொல்லி தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன்ர். அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது கோத்தாபய அரசுக்கு நேசக்கரம் நீட்டி வருகின்றனர். கோத்தாபய அரசாங்கம் தற்பொழுது வடக்குக்கும் கிழக்குக்கும் செயலிகளை உருவாக்கி தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இதனை பல தரப்புக்களும் கண்டித்து வருகின்றன. இவ்வாறான ஒரு நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவரது அரசுக்கு ஆதரவு தருவோம் எனக் கூறிவருகின்றனர்.

கூட்டமைப்பினர் கடந்த காலத்திலும் ஆட்சியிலிருந்த அரசுக்கு ஆதரவு வழங்கி முண்டுகொடுத்து வந்தனர். தற்போது கோத்தாபய அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்பட்டால் தாம் அதனை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று பகிரங்கமாகவே கூறிவ்ருகின்றனர்.

கோத்தாபய அரசு 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறிக் கொண்டு இருக்கின்றபோது அதற்கு ஆதரவு தருவோம் என்ற சமிக்ஞையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது வெளிக்காட்டி வருகின்றது. எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் சார்பில் அரசுடன் எதிர்த்துப் போராடுவதற்கு தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது. அவர்கள் அரச மாளிகைகளில் விருந்தினர்களாக உலா வருவதற்கு மட்டுமே விரும்புகின்றார்கள். கோத்தாபய அரசுக்கு தாம் ஆதரவு வழங்குவதாகத் தற்போது கூறி வருகின்றமையானது இரட்டை நாக்கு அரசியலாகவே நாம் கருதுகின்றோம் என்றார். (ப-20)

# மக்கள் தகவல்களைத் தெரிவிக்க சிறைச்சாலையில் விசேட பிரிவு

கொழும்பு, ஜூன் 20

மக்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் தொடர்பில் தெரிவிப்பதற்கு சிறைச்சாலை தலைமையகத்தில் விசேட பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

0112678600 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு மக்கள் தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் எச்.எம்.டி.என்.உப்புல்தெனிய தெரிவித்தார். சிறைச்சாலை தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'சிறைச்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்கான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு தொடர்பில் அனைத்து தகவல்களையும் தற்போது என்னால் வெளிப்படுத்த முடியா விட்டாலும் எதிர்காலத்தில் சிறைச்சாலைகள் பாதுகாப்பானவையாக மாற்றியமைக்கப்படும்.

எனவே அந்த தகவல்கள் எதிர்காலத்தில் அனைவருக்கும் கிடைக்கப்பெறும். சிறைச்சாலை அதிகாரிகள் பலரை இடமாற்றம் செய்ய வேண்டியேற்பட்டுள்ளது. அதேபோன்று சிறைச்சாலை தலைமையகத்தின் ஆணையாளர் பதவியிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சிறைச்சாலை நெரிசல் தற்போது பிரதான பிரச்சினையாகவுள்ளது. இது தொடர்பில் நீதித்துறை, பொறியியல் துறைகளுடன் கலந்துரையாடி புதிய கட்டடங்களை அமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் மக்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் தொடர்பில் தெரிவிப்பதற்கு சிறைச்சாலை தலைமையகத்தில் சிறப்புப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் வழங்கப்படும் தகவல்களின் இரகசியத் தன்மை பேணப்படும். சிறைச்சாலைக்குள் மின்சாதனப் பொருள்கள் கொண்டுசெல்லப்படுகின்றமைக்கு சிறைக்கு பொறுப்பான அதிகாரியே பொறுப்புக் கூற வேண்டும். அவரது அனுமதியுடனேயே இவை கொண்டு செல்லப்பட்டுள்ளன என தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போது கண்காணிப்புக் கமரா பொருத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ)

# இந்தியா - இலங்கை பரஸ்பர பாராட்டு

கொழும்பு, ஜூன் 20

அரசு முன்னெடுக்கும் கொவிட்19 ஒழிப்பு நடவடிக்கைக்கு இந்திய அரசு பாராட்டுத் தெரிவித்துள்ளது. இந்தியத் தூதுவர் கோபால் பக்ளே நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியைச் சந்திந்தார். சுகாதார அமைச்சில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன்போது கொரோனா ஒழிப்புக்கு இலங்கை அரசு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்டிய இந்தியத் தூதுவர், சுகாதார அமைச்சர் வழங்கி வரும் தலைமைத்துவத்தையும் வெகுவாகப் பாராட்டினார். எத்தகைய நிலைமையிலும் அரசுக்கு உதவ தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கு முன்னர் இந்திய அரசு வழங்கிய ஒத்துழைப்பை வரவேற்ற அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதற்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார். (ப)

*அவன்ட்கார்ட் நிறுவனம் தொடர்பில்*

# துறைமுக அதிகார சபையை கண்டித்த வசந்த சமரசிங்க

கொழும்பு, ஜூன் 20

அவன்ட்கார்ட் நிறுவனத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் எவ்வாறு எவ்வித விலைமனுக் கோரலும் (டென்டர்) இன்றி அரச நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்? அவன்ட்கார்ட் மற்றும் ரக்னா லங்கா நிறுவனங்களுடன் இவ்வாறானதொரு ஒப்பந்தத்துக்குச் செல்வதற்கு துறைமுக அதிகார சபைக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

3000 துப்பாக்கிகள், ஒன்றரை இலட்சம் துப்பாக்கி ரவைகளை மறைத்து வைத்திருந்தமை தொடர்பில் அவன்ட்கார்ட் நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு அரச நிறுவனத்துடன் எவ்வித விலைமனுக் கோரலும் (டென்டர்) இன்றி ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்? அதற்கு ஜனாதிபதி எவ்வாறு அனுமதி வழங்கினார்? ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜயநாத் கொலம்பகே அவன்ட்கார்ட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக இருந்தமையின் காரணத்தினால் தான் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதா ? சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி இன்றி இவ்வாறான செயற்பாடு ஏன் முன்னெடுக்கப்பட்டது என்பதே எமது கேள்வியாகும். சட்டமா அதிபரின் ஆலோசனை நிச்சயம் பெறப்பட்டிருக்க வேண்டும். வரலாற்றில் முதல் முறையாக பெரும் ஊழல் மோசடிக் குழுக்கள் இரண்டு ஒன்றிணைந்துள்ளன. குறைந்தளவு கப்பல் சேவை முகவராக பதிவு கூட இந்த இரு நிறுவனங்களாலும் செய்யப்படவில்லை. காரணம் இதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி பெருமளவிலானதாகும். அவன்ட்கார்ட் நிறுவனத்தினால் இதனைத் தனித்துச் செய்ய முடியாது. இது அரசாங்கத்தின் வருமானத்தைச் சீரழிக்கும் செயற்பாடாகும். அவன்ட்கார்ட் மற்றும் ரக்னா லங்கா நிறுவனங்களுடன் இவ்வாறானதொரு ஒப்பந்தத்திற்கு செல்வதற்கு துறைமுக அதிகார சபைக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது-என்றார். (ப)

# உரிமை அரசியல் பேசுவதானது 2020இன் அதிசிறந்த நகைச்சுவை

## முஸ்லிம் தலைமைகளைச் சாடினார் அதாவுல்லா

கொழும்பு, ஜூன் 20

நல்லாட்சி அரசில் ஆறடி நிலத்தைக்கூட அபிவிருத்தி செய்யாத முஸ்லிம் தலைமைகள் இன்று ஆகாயத்தில் கோட்டை கட்டப்போவதாக, உரிமை அரசியல் பேசுவது இந்த ஆண்டின் அதிசிறந்த நகைச்சுவையாகப் பதியப்படும் என்று தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமமான ஏ. எல்.எம் அதாவுல்லா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சமூகத்தின் உண்மையான எதிர்பார்ப்புக்களை உணர்ச்சிவசப்படுத்தி மழுங்கடித்த இத்தலைமைகள், கடந்த ஆட்சியின் பங்குதாரர்கள் என மார்தட்டிய சிலரால் முஸ்லிம் பிரதேசங்களில் ஆறடி நிலத்தைக்கூட அபிவிருத்தி செய்யமுடியாமல் போனது.

எனவே முஸ்லிம் சமூகம் உணர்ச்சி அரசியலிலிருந்து அவசரமாக விடுபட வேண்டும். உணர்ச்சி வசப்பட்டதால் சிறுபான்மைச் சமூகங்கள் அபிவிருத்தி உள்ளிட்ட உரிமைகளை வெல்வதிலிருந்து தூரமாக்கப்பட்ட வரலாறுகளே அதிகம் - என்றார்.

(ப)

# ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நீர்,மின்சார கட்டணங்கள் இருக்காது

## முன்னாள் எம்.பி.அஜித் பீ பெரேரா உறுதி

கொழும்பு, ஜூன் 20

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெற்று ஆட்சியமைத்தால் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை அறவிடப் போவதில்லை. இதுவரையில் யாராவது அந்தக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தால் அந்தப் பணம் மீளச்செலுத்தப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா, உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் 19 வைரஸ் பரவலின் காரணமாக மின்சார கட்டணம் மற்றும் நீர் கட்டணம் என்பன வழமைக்கு மாறாக இரண்டு, மூன்று அல்லது நான்கு மடங்காக அதிகரித்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்தில் கட்டணம் தொடர்பான திட்டமிடலின்போது சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் நாங்கள் தெளிவுப்படுத்தியும் அரசு எந்தவிதக் கவனமும் செலுத்தவில்லை. பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால். சாதாரண மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அசாதாரண முறையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நீர் மற்றும் மின்சாரக் -கட்டணங்களை அறவிடப்போவதில்லை. அதனால் இதுவரையும் இந்தக் கட்டணங்களைச் செலுத்தாமல் இருப்பவர்கள் தொடர்ந்தும் செலுத்த வேண்டாம். அவ்வாறு எவரேனும் கட்டணங்களைச் செலுத்தியிருந்தால் எங்களது ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டணத் தொகையை உரிய தரப்பினப்பிருக்கு மீளச் செலுத்தவும் நடவடிக்கை எடுப்போம்-என்றார். (ப)

# தமிழர்கள் ஒருமித்து வாக்களிக்காவிடில் அரசியல் அநாதைகள் ஆக்கப்படுவோம்

## அடித்துக் கூறுகிறார் சயனொளிபவன்

தேர்தல் களத்திலே தமிழர்கள் அனைவரும் ஒன்றாய், ஒருமித்து வாக்குகளை அளிக்காவிடில் எமது இருப்பை இழந்து அயல் சமூகத்திடம் கையேந்தும் அரசியல் அநாதையாவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இரா.சயனொளிபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அம்பாறை மாவட்டத்தில் 21 பதிவு செய்யப்பட்ட கட்சிகளும், 30 சுயேச்சைக் குழுக்களும் உள்ளடங்கலாக மொத்தமாக 510 வேட்பாளர்கள் வெறுமனே 7 ஆசனங்களுக்காகப் போட்டியிடுகின்றனர். நாம்எமக்குள் வாக்கிற்காகவும், தனிப்பட்ட நன்மைகளுக்காகவும் பிரிந்து நிற்பதால் எந்தச் சாத்தியமான விளைவுகளையும் அடையப்போவதில்லை. நிச்சய மாக இது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே உருவாகி உள்ள பிரதிநிதித்துவப் போட்டியாகவே இதனை நாம் கண்கொண்டு பார்க்கவேண்டும். எனவே தமிழ் மக்கள் தனிப்பட்ட குரோதங்கள், கட்சி வேறுபாடுகள் என்பவற்றைக் களைந்து எமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள ஒன்றாக அணி திரண்டு ஓர் ஆளுமையான பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்ய வேண்டும் -என்றார் (ப-150)

# மிலேனியம் சவால் ஒப்பந்தத்துக்கு தேர்தலின் பின் கையெழுத்திடப்படும்

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 20

**ஜனாதிபதித் தேர்தலின்போது மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து மிகைப்படுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடனேயே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்பது தெளிவாகிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மத்திய வங்கி போன்ற அரச நிறுவனங்களுடைய செயற்பாடுகளில் உத்தியோகபூர்வமாகத் தலையிடுவதை விடுத்து முறையற்ற விதத்தில் செயற்பட்டு ஜனாதிபதி தன்னுடைய பொறுப்புக்களை உணராதவராகின்றார். அத்தோடு தனது தனிப்பட்ட கருத்துக்குப் பணிபுரிய வேண்டும் என்ற வழிமுறையானது ஜனநாயகம் உள்ள நாட்டுக்கு பெரும் நெருக்கடியாக அமையும். ஜனநாயக அமைப்புக்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்தக் குறைபாடுகளைச் சரி செய்வது நாடாளுமன்றத்தின் கடமையாகும்.

எனினும் அவ்வாறான குறைபாடுகளை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி ஜனநாயக அமைப்பின் கட்டமைப்புக்கு வெளியில் சென்று செயற்படுவது பாரதூரமானதொன்றாகும்.

பொறுப்புக் கூறவேண்டிய அமைச்சர்கள் தமது பொறுப்புக்களிலிருந்து விலகி அதிகாரிகள் மீது அந்த சுமையை திணிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. உண்மையில் பொறுப்பு கூறவேண்டியவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள். குற்றச் செயல்கள் புரிந்தவர்கள் ஒன்றிணைந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமக்கு பிரச்சினையாக இருப்பவர்கள் மீது குற்றஞ் சுமத்தி விடுகின்றனர்.

தேர்தலின் பின்னர் மில்லேனியம் சவால் (எம்.சி.சி.) ஒப்பந்தம் தொடர்பில் சிறந்த முடிவு கிடைக்கும் என்று அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். எம்.சி.சி. ஒப்பந்தம் பாரதூரமானதொன்றுதான். எனினும் ஜனாதிபதித் தேர்தலின் போது அதனை மேலும் மிகைப்படுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடனேயே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்பது தெளிவாகிறது - என்றார். (ப)

# காணிகளை அபகரிக்க முனைப்பு தமிழர் ஓரணியில் திரள வேண்டும்

## முன்னாள் எம்.பி சாள்ஸ் அழைப்பு

தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் முனைப்பு இடம்பெறும்போது தமிழர்கள் ஒரணியில் திரளவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா தரணிக்குளம் புதியநகரில் இடம்பெற்றற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியாவில் வனஇலாகா வனஜீவராசி, மகாவலித் திட்டங்களின் ஊடாக சிங்கள மக்களைக் குடியேற்றும் செயற்பாடு தீவிரமாக இடம்பெற்றிருந்தது. இதனைச் செய்த கடந்த ஆட்சியாளர்களே தற்போதும் ஜனாதிபதியாகவும், அரசாங்கமாகவும் உள்ளனர். வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் தமிழ் மக்களின் 140 ஏக்கர் காணி பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டதோடு ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் அக்காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்குகின்ற செயற்பாடு காணப்பட்டது. இவ்வாறான நிலையில் தமிழர்கள் ஓர் அணியாக நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை முதல் திருகோணமலை வரை இன வீதாசாரத்தை இல்லா தொழிப்பதற்கான நடவடிக்கையையே எடுத்து வருகின்றனர்.09 மாகாணங்கள் இருக்கின்ற போது கிழக்கு மாகாணத்தக்கு மட்டும் தொல்பொருளுக்கான செயலணியாக தமிழர்கள் இல்லாத செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இச்சூழலில் தமிழ் மக்கள் நிதானித்தும் ஒன்றித்தும் செயற்பட வேண்டிய தேவை உள்ளது. தமிழ் மக்களுக்கான கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதால் அதில் ஒரு சிலரின் கருத்துக்கள் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதாக இருந்தாலும் அதனைக் கூட்டமைப்பின் கருத்தாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அத்துடன் கூட்டமைப்பினையும் மக்கள் ஒதுக்கி விடக்கூடாது - என்றார்.

(ப-110)

# அதிகாரிகளை மிரட்டுவதை விடுத்து கொள்கைத் திட்டங்களை வகுங்கள்!

## கோத்தாவைச் சாடினார் வேலுகுமார்

கொழும்பு, ஜூன் 20

மத்திய வங்கி அதிகாரிகளை அழைத்து மிரட்டுவதைவிடுத்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கொள்கை ரீதியிலான திட்டங்களை ஜனாதிபதி வகுக்கவேண்டும். இவ்வாறான விடயங்களை சுட்டிக் காட்டி, ஆலோசனைகளை முன்வைப்பதற்காகவேநாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு வலியுறுத்தினோம் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் நிதி அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அவ்வமைச்சுக்கு செயலாளர் ஒருவர் இருக்கின்றார். வங்கிகளின் வங்கியாகக் கருதப்படுகின்ற மத்திய வங்கிக்கு ஆளுநர் ஒருவரும் இருக்கின்றார். இவர்கள் மூவருமே பிரதானமாக பொறுப்புக் கூறவேண்டியவர்கள். இவர்களுக்கான நியமனத்தை ஜனாதிபதியே வழங்கினார். எனவே, இவர்களை விடுத்து மத்திய வங்கி அதிகாரிகளை அழைத்து. பிரசாரத்துக்காக அவர்களை மிரட்டுவது ஜனாதிபதியொருவர் செய்யக் கூடிய பணி அல்ல. இராணுவ அதிகாரிகளை நியமித்து செயலணிகளை அமைத்தால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விடமாட்டாது - என்றார்.

(ப)

# மன்னாரிலிருந்து சைவர் ஒருவரே நாடாளுமன்று செல்லவேண்டும்

*தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சியின் முதன்மை வேட்பாளர் விருப்பம்*

**மன்னார், ஜூன் 20**

**சைவத் தமிழர்களுக்கு என மன்னாரில் இருந்து குரல் ஒன்று ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வன்னியில் தமிழ் தேசிய சைவ மக்கள் என்ற சுயேச்சைக்குழு இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளது என்று அந்த சுயேச்சைக்குழுவின் முதன்மை வேட்பாளர் மனோ ஐங்கரசர்மா தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

'தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி' இந்த முறை வன்னித் தேர்தல் தொகுதியில் சுயேச்சை குழு 01 என்ற பெயரில் போட்டியிடுகின்றோம். சைவத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் ஏற்கனவே இருக்கின்ற கட்சிகளினால் மக்களுக்கு போதிய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காத காரணத்தாலும், மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் எங்களது மக்களின் விருப்பத்தின் பேரில் இந்த கட்சியானது உதயமாகி இந்த முறை தேர்தலைச் சந்திக்கின்றது. எனவே எங்களது கட்சிக்கு முழுமையான ஆதரவை வழங்கி எங்களை நாடாளுமன்றம் அனுப்பினால் நிச்சயமாக நாங்கள் எங்கள் மக்களுக்காகச் செய்ய வேண்டியவற்றைச் செய்வோம். இதுவரை இடம் பெற்ற தேர்தல்களில் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒன்றிணைந்து வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்திருந்தோம். அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலிருந்து ஒரு சைவப் பிரதிநிதியை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டங்களுடன் கடந்த 6 தடவைகள் நாங்கள் பேச்சு நடத்தினோம். ஆனால் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தலில் எங்களை ஒதுக்கி விட்டது. இந்த நிலையில் சைவ மக்கள், சைவ ஆலய பிரதிநிதிகளை ஒன்றுகூட்டி கண்டன பேரணியையும் நடத்தி இருந்தோம். 'சைவத் தமிழர்களுக்கு' என மன்னாரில் இருந்து குரல் ஒன்று ஓங்கி ஒலிக்க வேண்டும். வவுனியா,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்தும் ஆதரவாக குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். அதற்கு இணைந்து செயற்பட வேண்டும் என்று முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன - என்றார். (ப-56)

# அரசின் சமூக நலக் கொடுப்பனவை தானே வழங்கியது போல் பாசாங்கு

*முன்னாள் பிரதி அமைச்சரை தாக்கினார் ஹுனைஸ் பாருக்*

வவுனியா, ஜூன் 20

இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசிக்கும் முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வன்னியைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவர் தான் வழங்கியது போல நாடகம் ஒன்றை அரங்கேற்றியிருக்கிறார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைன்ஸ் பாருக் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

மொட்டுச் சின்னத்தில் களம் இறங்கும் முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருடைய ஆள்கள் அங்கு சென்று அந்தப் பணத்தை அவர்கள் கொடுப்பது போல பெரிய நாடகத்தை அரங்கேற்றியிருக்கின்றார்கள். வன்னியைச் சேர்ந்த அந்த முன்னாள் பிரதி அமைச்சர் தான் அந்தப் பணத்தை வழங்கியது போல செயற்பட்டிருக்கின்றார்.

முஸ்லிம் வேட்பாளர்களுக்கு நாம் ஒன்று சொல்கின்றோம். நீங்கள் சரியான இஸ்லாமியர்களாக இருந்தால் அதைவிட்டு உடனே ஒதுங்க வேண்டும் -என்றார். (ப-110)

# ஆட்சியைத் தக்கவைக்க முடியாத தலைமை ரணில்

*முன்னாள் எம்.பி முஜிபுர் ரஹ்மான்*

கொழும்பு, ஜூன் 20

நான்கரை ஆண்டுகள் கட்டிக்காத்த ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முடியாத தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்கவிடம் கண்டோம். எனவேதான் மாற்றும் தலைமையைத் தீர்மானித்தோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும். சஜித் ஆதரவு அணியின் மத்திய கொழும்பு பிரதான அமைப்பாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

11 வருடங்களாகத் தொடர்ந்து எதிர்க்கட்சியில் இருந்து பல சவால்களுக்கு முகம்கொடுத்து ஆட்சியைக் கைப்பற்றினோம். எனினும் நான்கரை வருடங்களிலேயே அதனைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத இயலாமையை நாம் தலைமையிடம் கண்டோம். இதனால் நாட்டை அபிவிருத்தியை நோக்கி முன்னகர்த்திச் செல்வதிலும் நாம் தோல்வியடைந்தோம். இதனால் புதிய தலைமைத்துவத்தின் கீழ் முன்னோக்கிய பயணமொன்றை மேற்கொள்ளவே நாம் அரசியல் ரீதியில் தீர்மானமொன்றை எடுத்தோம். வயதான ஒரு தலைமையை வைத்துக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வதா? அல்லது 53 வயதுடைய இளம் தலைமையொன்றுடன் இணைந்து பயணிப்பதா என்ற தீர்மானத்தை எடுக்க நேரிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள 90 வீதமானோர் இந்த நிலைப்பாட்டையே எடுத்துள்ளனர்- என்றார். (ப)

# ஐ.தே.கவை ரணில் சீரழித்ததாலேயே சஜித் தலைமையில் ஐ.ம.ச.உருவானது

*விளக்குகிறார் இராதாகிருஷ்ணன்*

நுவரெலியா, ஜூன் 20

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மைத்திரிபால சிறிசேன இல்லாது செய்தது போல, ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்கிரமசிங்க சின்னாபின்னமாக்கிவிட்டார். எனவே, மலையக மக்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கே ஆதரவு வழங்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலவாக்கலையிலேயே அதிகளவு தமிழ் மக்கள் வாழ்கின்றனர். மலையகத்தின் இதயம் இந்த நகரம்தான். தலவாக்கலையை அடையாளப்படுத்திய பெருமை அமரர் சந்திரசேகரனையே சாரும். எனவே, இங்கு தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தமை சிறப்பான விடயமெனக் கருதுகின்றேன். நுவரெலியா மாவட்டத்தில் உள்ளவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கே வாக்களிக்கவேண்டும். அதிலும் வெற்றிபெறக்கூடிய வேட்பாளர்கள் யாரென இனங்கண்டு அவர்களை ஆதரிக்கவேண்டும். தனித்து பயணித்தால் சாதிக்கமுடியாது. சமூகத்தின் நலன்கருதியே தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் பயணிக்கின்றோம். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்குள் இன்று பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் எம்மை ஆதரிக்க நினைக்கின்றனர். அவர்களையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தவர்கள் வந்தால் அவர்களையும் அரவணைத்துக்கொண்டே நாம் பயணிக்கவேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் 5 லட்சத்து 77 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் உள்ளன. அதில் பதிவுசெய்யப்பட்ட அனைவரும் வாக்களிக்கப்போவதில்லை . எனவே, இருக்கின்ற பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் வாக்களிக்க வேண்டியது வாக்காளர்களின் கடமையாகும்.

மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சியை இல்லாது செய்ததாலேயே மொட்டுக் கட்சி உருவானது. அதேபோல் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாது செய்ய முற்படுவதாலேயே சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உருவானது. நாமும் கூட்டணியிலேயே இருக்கின்றோம். மக்கள் அந்தக் கூட்டணியையே ஆதரிக்க வேண்டும் - என்றார். (ப)

# இனவாதிகளை அரசு கட்டுப்படுத்தவேண்டும்

*முன்னாள் எம்.பி அப்துல்லா மஃறூப் தெரிவிப்பு*

நாட்டினுடைய ஜனாதிபதி இனவாதிகளைக் கட்டுக்கோப்புக்குள் கொண்டுவரவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ,முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். 2000ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிற்பாடு இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் மட்டுமல்ல நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் சமூக உரிமைக்காக ஒருமித்த குரலாக ஒலிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 70 வருட காலமாக முஸ்லிம் சமூகத்தினுடைய மதம் சார்ந்த விடயங்களை முன்னெடுக்கின்ற அமைப்புகளாகச் செயற்பட்ட தப்லீக் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, தவ்ஹீத் ஜமாத், ஜாமியா நளீமியா போன்ற கலாபீடங்கள் அனைத்தையும், பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவை என்று இனவாதிகள் பேசுகின்றனர். அந்த என்ன வாதிகளை ஒரு கட்டுக்கோப்புக்குள் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி கொண்டுவரவேண்டும் - என்றார். (ப)

# மஹிந்தவின் கட்சி ஆட்சியமைக்க ஆதரவு

*முன்னாள் எம்.பி சீனித்தம்பி யோகேஸ்வரன்*

மட்டக்களப்பு, ஜூன் 20

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன தேர்தலின் பின்னர் ஆட்சி அமைக்கக் கூடிய சூழல் இருந்தால் புதிய அரசமைப்பு விடயத்தில் எங்களது வேண்டுகோளை ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால் அவர்களது அரசாங்கத்துக்குக்கூட நாங்கள் ஆதரவினை தெரிவிக்கக்கூடிய சூழல் உருவாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்ற வேட்பாளருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுவாக கடந்தகால அரசில் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவு கொடுத்திருந்தோம். எங்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சி அரசோ அல்லது பொதுஜன பெரமுன அரசோ அல்லது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசோ அல்லது சஜித் பிரேமதாசா அரசோ எதுவாக இருந்தாலும் சிங்களப் பேரினவாத அரசு தான். இவர்களில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதில் யார் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கின்றார்களோ அவர்களோடு எப்போதும் பேசுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

அந்த வகையிலே மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி தேர்தலின் பின்னர் ஆட்சி அமைக்கக்கூடிய சூழல் இருந்தால் அதேநேரத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கின்ற புதிய அரசமைப்பு விடயத்தில் கூடிய அக்கறையைக் காட்டுகின்ற செயற்பாட்டிற்கு முன்வந்து எங்களது வேண்டுகோளை ஏற்று எங்களோடு பேசி எங்களுக்கு பூரண ஒத்துழைப்பைத் தர முன்வருவார்களாக இருந்தால் அவர்களது அரசாங்கத்திற்கு கூட நாங்கள் ஆதரவைத் தெரிவிக்கக் கூடிய சூழல் உருவாகும் - என்றார். (ப-150)

# பொருளாதாரத்தை மேம்படுத்த எமக்கு மத்திய வங்கியே தடையாக இருந்தது

*முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 20

**பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக 'நல்லாட்சி' அரசில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியே தடையாக இருந்தது என்பது தற்போது புலப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க.**

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி உத்தரவிட்டு 24 மணித்தியாலத்துக்குள் வட்டி வீதத்தைக் குறைக்க முடியுமாக இருந்தால், அன்று நாங்கள் தெரிவித்தபோது மத்திய வங்கிக்கு ஏன் செய்ய முடியாமல்போனது எனவும் கேள்வி எழுப்பினார். நாட்டின் நிதி நிறுவனங்கள் தொடர்பான அனைத்து பொறுப்புக்களும் மத்திய வங்கிக்கே இருக்கின்றது. அதேபோன்று ஆட்சியில் இருக்கும் அரசின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்றவாறு நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பும் மத்திய வங்கியிடமே இருக்கின்றது. அரசின் கோரிக்கைகளை மத்திய வங்கிக்கு நிறைவேற்ற முடியாது இருந்தால், அதனை நிறைவேற்றுவதற்குத் தேவையான பரிந்துரைகளை அரசிடம் கேட்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் அரசு நிதிதொடர்பான நிவாரணங்களை மக்களுக்கு அறிவித்து அதனை வங்கிகள் செயற்படுத்தத் தவறினால் மக்கள் அரசையே குறைகூறுவார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தில் நான் நிதி அமைச்சராக இருந்து, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய பல முயற்சிகளைச் செய்தேன். ஆனால் அதற்கு மத்திய வங்கியிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. குறிப்பாக வியாபாரிகளுக்கு அரச வங்கிகளில் தற்போது இருக்கும் 14 வீத வட்டி வீதத்தை 5 வீதம்வரை குறைக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். ஆனால் மத்திய வங்கி அதனைச் செய்யவில்லை. அவர்கள் எப்போதும் பணவீழ்ச்சி அதிகரிப்பதை பாதுகாக்கும் நடவடிக்கையை மாத்திரமே மேற்கொண்டு வந்தனர்.

ஜனாதிபதி மத்திய வங்கிக்கு கடுமையாக உத்தரவிட்டு 24 மணி நேரத்துக்குள் வட்டி வீதத்தை 4 வீதம்வரை குறைக்க முடியுமாக இருந்தால், அன்று நாங்கள் அதனைச் செய்யுமாறு தெரிவித்தபோது ஏன் செய்யவில்லை?. இப்போது எப்படி பணவீழ்ச்சியை கட்டுப்படுத்துவது?. வட்டி வீதத்தை 4 வீதம் வரை குறைக்க முடியுமாக இருந்தும் அதனை மத்திய வங்கி செய்யாமல் இருந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது- என்றார். (ம)

## தொழிற்பயிற்சி நிலையங்கள் ஜூலை 6 முதல் மீள இயங்கும்

கொழும்பு, ஜூன் 20

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த தொழிற்பயிற்சி நிலையங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

50க்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட தொழிற்பயிற்சி நிலையங்களே முதலில் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. சுகாதார அமைச்சு தெரிவித்துள்ள பாதுகாப்பு முறைமைகளை அமைய இந்த நிறுவனங்கள் மீளத் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

## யாழில் மாடுகளை மோதியது ரயில்!

*ஒன்று சம்பவ இடத்தில் சாவு*

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன் துறை நோக்கி சென்ற ரயில் இரு பசு மாடுகளை மோதித் தள்ளியுள்ளது.

நாவலர் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் ஒரு பசுமாடு அங்கேயே உயிரிழந்துள்ளது. மற்றைய மாடு காயமடைந்தது.

சம்பவ இடத்துக்கு வந்த யாழ் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், கால்நடை மருத்துவர்களான மாறன் மற்றும் பிரியந்தினி ஆகியோர் அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து காயமடைந்த பசுக்களை மீட்டு சிகிச்சை வழங்கினர். (ம-20)

## கொரோனா ஒழிப்புக்கு சீனா பாராட்டு

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் கொவிட் 19க்கு எதிரான வேலைத் திட்டத்துக்கு சீன ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனாத் தூதுவருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையே ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி2)

## குற்றங்களுடன் தொடர்புடையவர் கைது

கொழும்பு, ஜூன் 20

திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுவொன்றின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ராகமை பொலிஸார் தெரிவித்தனர். சபித்த எனப்படும் சபித்த தினேஸ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் ராகமை தொடருந்து நிலையத்திற்கு அருகில் வைத்து அவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கைக்குண்டு, துப்பாக்கி, கேரள கஞ்சா, போதைப் பொருள் ஆகியவற்றுடன் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

சந்தேகநபருக்கு ராகமை பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றுக்காக கம்பஹா மேல் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

## 'கொக்கரக்கோ'வால் புகழ்பெற்ற சேவல் சாவு

பிரான்ஸ், ஜூன் 20



(மொறிஸ் சேவலுடன் அதன் உரிமையாளர்)

பிரான்ஸில் கொக்கரக்கோ சத்தத்துக்காக பெரும் சட்டச்சிக்கலில் மாட்டி உலகப் புகழ்பெற்ற சேவல் உயிரிழந்து விட்டது என்ற தகவலை அதன் உரிமையாளர் அறிவித்திருக்கிறார்.

மொறிஸ் என்று அழைக்கப்பட்ட ஆறு வயதான இந்தச் சேவல் கொரோனா முடக்க காலத்தில் நோய் வாய்ப்பட்டு உயிரிழந்தது என்ற செய்தியை தாமதமாக இப்போது வெளியிட்டிருக்கிறார் அதன் உரிமையாளர்.

பிரான்ஸின் மேற்குக்கரை பிராந்தியமான செரண்டி மரிரைம் (Charente Maritime)பகுதியோடு இணைந்த தீவில் உள்ள கிராமத்து வீட்டில் உரிமையாளருடன் வாழ்ந்த மொறிஸ், விடிகாலை வேளைகளில் வழமையாக எழுப்பும் கொக்கரக்கோ சத்தத்தைச் சகிக்காத அயலவர் ஒருவர் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடினார். மொறிஸ் உரத்துக் கூவி ஒலி எழுப்பித் தொந்தரவு செய்வதாகக் கூறி அவர் வழக்குத் தொடர்ந்தார்.

கடந்த ஆண்டில் பெரும் சட்டச்சிக்கலாக மாறிய இந்தக் கொக்கரக்கோ விவகாரத்தில் முழு நாடும் மட்டுமன்றி உலக ஊடகங்களும் மொறிஸ் சேவலின் பின்னால் நின்று அதனை ஒரு கிராமப்புற ஹீரோவாக மாற்றி இருந்தன.

பிரான்ஸின் நகரங்களில் அடுத்தவருக்கு இடைஞ்சலாக சத்தங்கள் போடுவதைத் தடுக்க பல சட்டங்கள் உள்ளன. ஆனால் நகரங்களில் இருந்து கிராமப்புறங்களுக்கு வருவோர் இத்தகைய சட்டங்களை கிராமங்களிலும் எதிர்பார்த்து அயலவர்களுடன் முரண்படுகின்றனர்.

கிராமப்புற வாழ்வின் ஓர் அடையாளமாக வர்ணிக்கப்பட்ட மொறிஸ், பூர்வீக வாசிகளுக்கும் புதியவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளின் மையத்தில் விவாதப் பொருளாக மாறி ஊடகங்களில் முக்கிய இடம்பிடித்தது.

அயலவருக்கு இடைஞ்சலாக சத்தம் எழுப்புதல் தொடர்பான சட்டங்களின் கீழ் நடைபெற்ற நீண்ட வழக்கில் கடைசியில் மொறிஸ் வென்றது. அது வழமைபோன்று தொடர்ந்து சத்தம் எழுப்பிக் கூவுவதற்கு அனுமதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மொறிஸுக்கு ஆதரவான தீர்ப்பின் தொடர்ச்சியாக கிராமப் புறங்களின் வாசனைகள் மற்றும் ஒலிகளைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் இயற்கையின் ஒலிகளைப் பேணும் Patrimoine sensorial என்ற புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் நிறைவேற்ற வழிவகுத்தது. (ஐ)

## மின்சாரப் பட்டியல் சிக்கல்: விளக்கம் கோரிய ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 20

கடந்த சில மாதங்களாக மின்சாரப் பட்டியலில் காணப்படும் சிக்கல் நிலைமைகள் தொடர்பில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விளக்கம் கோரியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இது தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார். மக்களுக்கான மின்சார நிவாரணம் உரிய முறையில் சென்றடைய வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா நிலைமைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்திய இலங்கை மின்சார சபைத் தலைவர் விஜித ஹேரத், வாடிக்கையாளர்களுக்கு சரியான மின்சாரப் பட்டியலே வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

# அலைவரிசை தெளிவின்மையால் 'சூம்' செயற்றிட்டத்தில் கற்க மாணவர் சிரமம்

தென்மராட்சி, ஜூன் 20

**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட கரணவாய் வடக்கு மற்றும் கரணவாய் வடமேற்கு ஆகிய பிரிவுகளில் உள்ள மாணவர்கள் தற்போது கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் 'சூம்' செயற்றிட்டத்தை அலைபேசிகளில் பார்ப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என அந்த மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.**

இந்தப் பிரிவுகளை அண்டியுள்ள சுற்றுவட்டத்தில் குஞ்சர்கடையடி, கலட்டி, வல்வெட்டித்துறை, இமையாணன் போன்ற இடங்களில் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ள நிலையிலும் கரணவாய் வடக்கு, வடமேற்கு ஆகிய பகுதிகளில் அலைபேசிகளின் வைபர் மற்றும் வாட்ஸ் அப் போன்றவை தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் பாடத்திட்டம் ஒளிபரப்பாகும் போது இப்பகுதியில் தெளிவின்மை காரணமாக வேறு இடங்களுக்குச் சென்று பாடத் திட்டங்களை கற்க வேண்டியுள்ளதெனவும் தெரிவித்தனர்.

குறித்த கோபுரங்களுக்கு உரிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் அதன் விசையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். (ஐ-9)



## கிரான் பாலத்தை திருத்தக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான் பாலத்தை மீள சீரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிரான், புலிபாய்ந்தகல், பொண்டுகச்சேனை, மியாங்குளம் போன்ற வீதிகளை ஊடறுத்துச் செல்லும் கிரான் பாலம் நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாமல் மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. இரண்டு வாகனங்கள் சமாந்தரமாக செல்ல முடியாத நிலையில் உள்ள இந்த பாலத்தில் அடிக்கடி விபத்துகள் இடம்பெறுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் சீரமைப்புத் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், மட்டக்களப்பு மாவட்டச் செயலர், கிரான் பிரதேச செயலர் ஆகியோர் கவனத்தில் கொண்டு திருத்தியமைக்க முன்வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-46)

## ஆஸியிலிருந்து 98 பேர் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 20

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஆஸ்திரேலியாவில் சிக்கியிருந்த 98 இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இலங்கை வந்தடைந்தனர். இவர்கள் மெல்போர்ன் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் ஆஸ்திரேலியாவில் உயர்கல்வியைத் தொடர்வதற்காகச் சென்ற மாணவர்களாவர். நாடு திரும்பியுள்ள அவர்கள் தற்போது பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கும்வரை, அவர்களுக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஹோட்டல்களில் தற்காலிகமாகத் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

## கதிர்காம எசல உற்சவ அழைப்பிதழ் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 20

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் நாளை 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கான அழைப்பிதழ் சம்பிரதாயபூர்வமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே தில்ருவன் ராஜபக்ஷவால் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ஐ)



### இலங்கையின்...

துக்கான பத்திரிகையாளர்கள் அமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஜூன் 26ஆம் திகதி சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தைக் கடைப்பிடிக்கும் முகமாக இரு அமைப்புகளும் இலங்கையின் சித்திரவதை வரைபடத்தை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களைச் சித்திரவதை செய்வதற்காக கடந்த மூன்று தாசப்தகாலமாக இராணுவத்தினரும், கடற்படையினரும், பொலிஸாரும், படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களும் பயன்படுத்தும் 219 இடங்கள் அடங்கிய வரைபடத்தை இந்த அமைப்புகள் வெளியிட்டுள்ளன. எனினும் இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகளின் முழுமையான அளவை இந்த வரைபடம் வெளிப்படுத்தவில்லை எனவும் இந்த இரு அமைப்புக்களும் குறிப்பிட்டுள்ளன.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடமும், லேக்ஹவுசின் கட்டடமொன்றும் சித்திரவதைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன் கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் பல பாடசாலைகளும், கல்லூரிகளும், பயிற்சி நிறுவகங்களும் தொழிற்சாலைகளும் பண்ணைகளும், சினிமா அரங்குகளும், கோல்வ் திடல்களும் சித்திரவதைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் இந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன. (க)

### குருநாகலில்...

தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை குருநாகலில் நடைபெறவுள்ளது.

பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் இன்று சனிக்கிழமை அநுராதபுர ஜய ஸ்ரீ மகா விகாரையில் மத வழிவாடுகளில் ஈடுபடவுள்ளார்கள். அதில் கலந்துகொண்ட பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முன்னணியின் பிரதமர் வேட்பாளராக குருணாகல் மாவட்டத்தில் இலக்கம் 17 இல் போட்டியிடும் மஹிந்த ராஜபக்சவினால் நாளை ஞாயிற்றுக்கிழமை குருநாகலில் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நல்லதொரு நாட்டை உருவாக்குவதே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்பவே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ள பாதுகாப்பு வழிமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டே தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்ற முடியும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (22)

### புலனாய்வு...

ராட்சி, கரணவாய் மத்தியைச் சேர்ந்த கே.கமலராஜா என்பவரே உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் உள்ள தேசிய புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

நேற்று மாலை அவர் தனிமையில் இருந்துள்ளார் என்றும், அதன்போதே அவர் இந்தத் தவறான முடிவை எடுத்துள்ளார் என்றும் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் தற்பாதுகாப்புக்காக வைத்திருந்த கைத்துப்பாக்கியால் அவர் தலையில் தன்னைத்தானே சுட்டு உயிரிழந்துள்ளார் என்றும் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்முனைப் பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

### கொரோனா...

ணிக்கை ஆயிரத்து 948 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 938 பேர் அடங்குகின்றனர். இதில் 901 பேர் கடற்படையினராவர்.

இதேவேளை, வெளிநாட்டுப் பிரஜைகள் 7 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வந்த 696 பேர் இதுவரை கொரோனாவுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 446 ஆக உயர்வடைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 491 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 43 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-22)

### 10 பேருக்கு...

ளது. இலங்கையில் இருந்து வேலை வாய்ப்புக்காக டுபாய் நாட்டிற்கு சென்று தங்கியிருந்தவர்களில் 290 பேர் நேற்றுமுன்தினம் சிறப்பு விமானத்தின் மூலம் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டனர். அவர்களில் 168 பேர் வவுனியா வேலங்குளம் விமானப்படைத் தளத்தில் உள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களில் சிலரிடம் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 10 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ம-18,110)



இன்று நயினை நாகபூசணி அம்மன் ஆலய மஹோற்சவம் கொடியேற்றத்துடம் ஆரம்பமாகின்றது. அதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது

# மின்னும் நவரத்தினம்போல் மேனி அழகுடையவள்

# அன்னை நாகபூஷணி அம்மா

கே.எஸ்.சிவஞானராஜா

நாம் வாழும் பூமி சக்திமயமானது. அது தாய் போல எதையும் தாங்கும் வல்லமை கொண்டது. பொறுமையின் சிகரமாக பூமி விளங்குவதனால் காணுகின்ற காட்சியெல்லாம் தாயவளின் கரங்களே எம்மைக் கணம்தோறும் காப்பாற்றுகின்றன. அந்தத் தாயவளின் வரந்தரும் முகூர்த்தங்களே சக்திபீடங்களாக விளங்குகின்றன. அவற்றிலே முதன்மையானது நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயமாகும்.

குறிப்பாக சமுத்திரக் கடலோடு எந்தவொரு ஆலயம் இருந்தாலும் கடல் இல்லாத பட்சத்தில் நதியோ, ஆறோ ஆலயத்தை மருவிச் சென்றாலும் அல்லது வற்றாத கேணி ஒன்று ஈசான மூலையிலோ வலது புறத்திலோ காணப்பட்டாலும் சம்பந்தப்பட்ட ஆலயம் அற்புதத்தாலும் அதிசயத்தாலும் அதிக வரத்தாலும் செழிப்புறும் என்பது வரலாறு.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலும் அற்புதங்கள் பல அரங்கேறியுள்ளன. நயினாதீவுக்குத் தென்புறத்தே புளியந்தீவு என்ற சிறிய தீவிலிருந்து ஒரு நாகபாம்பு தினமும் பூக்களைத் தாங்கியவாறு நாகபூசணி அம்பாளைத் தரிசித்து வந்தது. இந்த நிலையில் கருடன் என்ற முகவெள்ளையன் அதனைத் தடுத்து நிறுத்தி கொத்திச் செல்வதற்கு முயன்றது. நாகபாம்பு கருடனுக்குப் பயந்த நிலையில் கடல் நடுவில் நெடுதுயர்ந்த கல்லில் சுற்றிக் கொண்டது. கருடனால் பாம்பினைக் கொத்திட முடியாத நிலையில் மரக்கலத்தில் வந்து கொண்டிருந்த வணிகனான மாநாயக்கன் என்பவன் பாம்பினைக் காப்பாற்ற எண்ணியவனாக கருடபகவானிடம் பிச்சை கேட்டான்.

"கருட பகவானே இந்த நாகபாம்பை ஒன்றும் செய்யாதே. இப்பாம்பானது அம்பாளுக்குத் தினமும் பூ எடுத்து வந்து பூஜித்து வருகிறது. இது அம்பாளின் தொண்டுக்கு ஏற்ற ஜீவப்பிராணி. அதை அப்படியே விட்டுவிடு" என்று பரிந்து கேட்டான். கருடபகவான் உடனடியாக அதற்குச் சம்மதிக்கவில்லை.

வணிகனைப் பார்த்து ஒரு கட்டளையை இட்டது. 'மாநாயக்கா! உன் செல்வங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி அம்பாளுக்கு ஓர் அழகிய ஆலயம் எழுப்புவாயாக. அப்படி நீ கட்டும் பட்சத்தில் இந்தப் பாம்பினைக் கொல்லாமல் விட்டுகிறேன்" என்று கூறுவதுபோல குறிப்பால் உணர்த்திற்று. மாநாயக்க வணிகன் சம்மதம் கொள்ளவே கருடன், பாம்பினைக் கொல்லாமலும் தொந்தரவு செய்யாமலும் விட்டுவிட்டது. பாம்பு பூவோடு அம்பாள் இருக்குமிடம் சென்று வணங்கியது. வணிகனும் வீடு சென்று மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினான். அன்றிலிருந்து அவன் தொட்டது அனைத்துமே பொன்னாக வீட்டிலே பொலிந்தன. கருடபகவான் சொன்னது போல நாகபூசணி அம்மனுக்கான ஆலயம் பெரிதாக உருப்பெற்று இன்றோ 108 அடி உயரமான கோபுரத்தோடு ஆகமவிதிகள் ததும்ப ஆண்டுதோறும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. 64 சக்திபீடங்களில் இது புவனேஸ்வரி பீடமாகப் பேறளிக்கின்றது. 1960ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அமுதசுரபி அன்னதான சபையினர் அன்னதான நிகழ்வை மெய்யன்போடு ஒப்பேற்றி வருகின்றனர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்து கீர்த்தியும் கிருப கடாட்சமும் நேர்த்தியாக அமைந்த பென்னம்பெரிய ஆலயம் நயினை ஸ்ரீ நாகபூஷணி ஆலயமாகும். நாக தோஷமுடையவர்களுக்கு தோஷநிவர்த்தி ஆகும்படி வரவேற்கும் ஆலயம் இதுவாகும். மிகப் பழைமையாக நாகம்மன் பிரதிஷ்டையும் அதன் பின்னால் ஐந்து தலையுடைய நாகப்பிரதிஷ்டையும் அம்பாளின் சொரூபத்தைப் பிரதிபலிக்கின்றன.

நாகதீவு, நயினாதீவு, நாகநயினாதீவு, மணிபல்லவத்தீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, நாகேஸ்வர தீவு என இவ்வாலயம் அமைந்த பூமியைப் பெருமிதமாக அழைக்கின்றார்கள். வன்னிமரம் இந்த ஆலயத்தின் தல விருட்சமாகும். இதனால் போலும் அம்பாளை வன்னிமரத்து வடிவழகி என்றும் அழைக்கிறார்கள். கொரோனாவால் இந்த ஆண்டு இலங்கையிலுள்ள சகல ஆலயங்களும் மகோற்சவங்களை மிகவும் எளிமையாகக் கொண்டாடும் நிலையில் ஆனி மாதம் அமாவாசையோடு உற்சவம் பேறாக்கப்படுகிறது.

சப்பரமும் இரதோற்சவமும் மிகவும் அற்புதமாக வரந்தரும் திருவிழாக்களாகும். பதினோராம் திருவிழாவின்போது பாம்பு சுற்றிய கல்லுக்கும் கருடன் கல்லுக்கும் விசேட பூஜை நடைபெறுவதைக் காண பக்தகோடிகள் கடலுடன் ஒன்று சேருவர். குழந்தைப் பாக்கியம் வேண்டும் அடியார்களுக்கு அம்பாளே குழந்தையாக அவதரிப்பாள். வேண்டமுதும் தரும் உபகாரியே பூஷணி!





## கொடியேற்றி கொடிய கொரோனாவை போக்கிடு தாயே....

அலைகடல் நடுவே வீற்றிருந்து - எல்லையில்லா
அருள் பாலிக்கும் நாகபூசணித் - தாயே
உலகெங்கும் உயிர்பறிக்கும் கொடிய கொரோனாவால்
உந்தன் உயர் திருவிழாவுக்கும் கட்டுப்பாடுகள் பல தாயே
ஊர் பிறந்தவர் கூட உபவாசம் இருந்தாலும்
உம்மை வந்து தரிசிக்க தடைகள் பல பல தாயே
நித்திய அமுதளிக்கும் உந்தன் ஆலயத்தில்
அமுதளிக்க உமக்கும் தடை
அமுதசுரபி அன்னதான சபைக்கும் தடை தாயே
உந்தன் பிள்ளைகள் நாங்கள் எம் குறைதனை
தாயிடம் கூறாமல் யாரிடம் கூறுவது தாயே
உந்தன் கடைக்கண் பார்வையை ஒருமுறை
உலகுக்கு காட்டுவாயா? தாயே
இனியும் எம் மக்களை அல்லல் படவிடாதே- தாயே
கொடியேற்றி கொடிய கொரோனாவை போக்கிடு- தாயே

நயினை விசு இராசநாயகம்.

## மின்சாரம் தாக்கி தம்பதியர் சாவு!

கொழும்பு, ஜூன் 20

களுத்துறை, தொடங்கொட நெஹின்ன பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அமைக்கப்பட்ட சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி வயோதிபத் தம்பதியர் இருவரும் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. உயிரிழந்தவர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். 68 வயதான கணவரும், 62 வயதான அவரது மனைவியுமே உயிரிழந்துள்ளனர். (ம)

# இயலாமையை மறைக்கவே ஆட்டநிர்ணயக் குற்றச்சாட்டு

## மஹிந்தானந்தவுக்கு எதிராக சீறிப் பாய்கின்றார் சஜித்

கொழும்பு, ஜூன் 20

'தமது அரசின் இயலாமையை மறைப்பதற்காக நாட்டின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஆதரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சில செயற்திறனற்ற அரசியல்வாதிகளால் ஒரு நுட்பமாகப் பயன் படுத்தப்படுகின்றது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆட்டநிர்ணயம் செய்யப் பட்டது என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வெளியிட்ட கருத்தையடுத்து பெரும் சர்ச்சையொன்றைக் கிளம்பியிருக்கும் நிலையில், எவ்வித ஆதாரங்களுமின்றி அவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்குக் கண்டனங்களும் வலுத்து வருகின்றன.

இந்தநிலையில், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்குக் கண்டனம் வெளியிட்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ருவிட்டர் பக்கத்தில் இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது:

'தமது அரசின் இயலாமையை மறைப்பதற்காக நாட்டின் கிரிக்கெட் வீரர்கள் மீது ஆதரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது சில செயற்தினற்ற அரசியல்வாதிகளால் ஒரு நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது.

2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் தமது திறமையை நிரூபித்த சிறந்த கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மகேல ஜயவர்தன ஆகியோர் மீது இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படக்கூடாது. அவர்களுடைய அர்ப்பணிப்பான சேவைக்கும், அவர்கள் நாட்டுக்குப் பெற்றுத் தந்தவற்றுக்கும் உயர்வாக நடத்தப்படும் தகுதியை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். (ம-22)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (22.05.2020) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையார்

**அமரர் பொன்னுத்துரை காந்தரூபன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (19.06.2020) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதை அடுத்து வீட்டுகிருத்திய நிகழ்வு நாளை (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 204, ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி.
077 959 3820

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி கதிரமலை



கீரிமலையைச் சேர்ந்தவரும் தற்போது 158, சட்டநாதர் வீதியில் வசித்தவருமாகிய திருமதி தவமணி கதிரமலை நேற்று (19.06.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கீரிமலை சபாபதி கதிரமலையின் (ஆசிரியர்) அருமை மனைவியும், திருமதி ஜெகதாம்பிகை கலாதரன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி, திருநெல்வேலி), திருமதி கலைவாணி முத்துக்கிருஷ்ணன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி, திருநெல் வேலி), சபானந்தன் (கனடா), சபாநடேசன் (கனடா), சபாநேசன் (கனடா) ஆகியோரின் அருமை தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

158, சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

தொலைபேசி: 021 222 5186, 077 622 9848

## மரண அறிவித்தல்

### தேவராசா இராசரத்தினம்



தோற்றம் 03.10.1942 மறைவு 19.06.2020

சங்கத் தோட்டம் சமரபாகுவைப் பிறப்பிடமாகவும் களுக்கொம் பான் கொற்றாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா இராசரத்தினம் நேற்று (19.06.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2020) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 179 3325

தகவல் :
இ.கிருபானந்தன் (கிருபா)

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகலிங்கம் நாகேஸ்வரி



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் நாகேஸ்வரி நேற்று (19.06.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவகுமார், சுதா, நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தன், ரஞ்சினி, ஹேமலா ஆகியோரின் மாமியாரும், கேஷிகா, யுகேதன், கவிநயா, அர்ஜன், டிலக்சிகா, டிலுக்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல் : குடும்பத்தினர்.
077 4322 814

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி இராசலட்சுமி



தோற்றம் 07.06.1944 மறைவு 19.06.2020

யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராசலட்சுமி நேற்று (19.06. 2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா, வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கந்தசாமியின் (பலாங்கொடை) அன்பு மனைவியும், மோகனராஜ் (பிரான்ஸ்), ஆனந்தராஜ் (பிரான்ஸ்), லோகனராஜ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுகந்தராஜ் (நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஜந்தினி, ரம்மியா, வதனி, ஆகியோரின் அன்பு மாமியாரும், கவுதம், வினோ, ராம், அசோக், வீமன், நிலக்சான், கம்சிகன், கயல்விழி, தருண், மானசா, அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சீயாக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணவர்-கந்தசாமி (077 123 7051)
மகன்-ஆனந்தராஜ் 0033651939248
ரதன் (நீர்வேலி) 077 429 3482

தகவல் : -
குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பல்கலைக்கழகஅனுமதி 2019/2020
## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)
## இளங் கலைமாணி மொழிபெயர்ப்புக் கற்கைநெறி (கௌரவ) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கைநெறிக்கு அனுமதிபெற விரும்பும் தகுதியான விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 05.07.2020 @ 11.00 PM வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கானபொதுநிபந்தனைகளும் தகைமைகளும்**

இளங் கலைமாணி மொழிபெயர்ப்புக் கற்கைநெறி (கௌரவ) யைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் எப் பிரிவில் தோற்றியவர் களும் ஆகக் குறைந்தது 3 பாடங்களில் ஒரேதடவையில் சித்தியடைந்திருப்பவர்கள் விண்ணப்பிக்கவேண்டும்.

**உளச்சார்புப் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கில மொழித் திறமையைப் பரீட்சித்தல் என்ற இலக்கினை அடிப் படையாகவுள்ள பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைகள் தமிழ், ஆங்கில மொழிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்களில் நடத்தப்படவுள்ளது.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளம் ஊடாகதத்தமது விண்ணப்பங்களை ஒன்லைன் மூலம் (online) விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின்னர், விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கானவிண்ணப்பத்துடன் ரூபா 500.00 ஐ ஏதாவதொருமக்கள் வங்கிக் கிளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமக்கள் வங்கிக் கிளை, கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப் பட்டக. பொ.த (உ/த) 2019 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும்.** பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 05.07.2020 @ 11.00PM மணிவரை **பிரதிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மொழிபெயர்ப்புக் கற்கைநெறி 2019/2020"** எனக் குறிப்பிட்டுபதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்தியபற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப் படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி களின் பெயர்கள் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். ஆகவே தெரிவு செய்யப்படும் விண்ப்பதாரிகள் தத்தமது பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் கிடைப்பதில் தாமதம் ஏற்படின் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்துக்கு சமூகமளித்து தற்காலிக அனுமதி அட்டையைப் பெற்று பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதைத் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். இவற்றிற்குரிய பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் **021 222 6714.**

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

E,S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்
## பல்கலைக்கழக அனுமதி–2019/2020
## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)

- இசையில் (கௌரவ) இளநுண்கலைமாணி
- நடனத்தில் (கௌரவ) இளநுண்கலைமாணி
- சித்திரமும் வடிவமைப்பில் (கௌரவ) இளநுண்கலைமாணி

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதிபெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 10.07.2020ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

**அனுமதிக்கான தகைமைகள்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2019ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்ப துடன் தெரிவு செய்யவிரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடக சங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்ததுதிறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை ஆற்றுகை/உளச்சார்பு பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப் படும் ஆற்றுகைப் பரீட்சை/உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

சங்கீதம், நடனம்- ஆற்றுகை பரீட்சை
சித்திரமும் வடிவமைப்பும்- எழுத்துப் பரீட்சையுடன் செய்முறை மற்றும் உளச்சார்பு பரீட்சைகள்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளம் ஊடாக தத்தமது விண்ணப்பங்களை ஒன்லைன் மூலம் (Online) விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின்னர் விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் ரூபா 1000/= பரீட்சைக்கான கட்டணமாக செலுத்தவேண்டும்.**

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 500 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. **162100160000880** இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 10.07.2020 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்ததகைமையைகொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப் படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வாரம் ஒருநாள் பற்றிக் ஆடை!

*அரச அலுவலர்களுக்குக் கட்டாயம்*

கொழும்பு, ஜூன் 20

அரச அலுவலர்கள் வாரம் ஒருநாள் பற்றிக் ஆடை கட்டாயம் அணிந்து வரவேண்டும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரசன்ஸ.

இது தொடர்பில் அமைச்சர் விமல் மேலும் தெரிவித்தாவது: நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அலுவலர்களும் வாரத்தில் ஒருநாள் கட்டாயம் பற்றிக் ஆடைகளை அணிய வேண்டும் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. உள்நாட்டு கைத்தறி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது - என்றார். (ம)

### பெயர்மாற்றம்

கோப்பாய் தெற்கு கோப்பாயை சேர்ந்த றொபேட் மியூரின் ஒலின்ரா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை றொபேட் கிருஷ்விதா என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்து கொள்கின்றேன். றொ. கிருஷ்விதா

### பெண் வேலை ஆள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழில் ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் வேலை ஆள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. மாத வேதனமாக ரூபா.15,000/= வழங்கப்படும்.

**தொடர்பு: 076 118 4010**

### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்
### யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி


எமது பாடசாலையில் 2020.07.02ஆம் திகதி காலை 9.00 மணிக்கு Roof truss, Iron post, Asbestos sheet போன்ற கட்டடத்திலிருந்து அகற்றப் பட்ட பொருள்கள் மற்றும் பாடசாலையின் பாவனையிலிருந்து கழிக்கப் பட்ட இதர பொருள்களுக்குமான ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

பார்வையிடும் நேரம்:
வார நாள்களில் காலை 9.00 - 12.00

அதிபர்
18.06.2020 யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

### அகவை அறுபது காணும்
### மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்.



ஆசிரியர் சேவையில் முப்பது வருடங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றித் தனது
**அறுபது அகவையில் ஓய்வுபெறும் ஆசிரியர்**

**திரு. நாராயணசுவாமி ஸ்ரீரஞ்சன்**

**சேவை விபரம்**
யாழ். மத்திய கல்லூரி (28.03.1990 - 28.03.2013)
யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் (29.03.2013 - 31.12.2013)
யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி (01.01.2014 - 20.06.2020)

பல வளங்களோடு பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations

பாடசாலைச் சமூகம்
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய்மடியில்
04 • 05 • 1949



இறை அடியில்
02 • 07 • 2019

**திருமதி இராசலட்சுமி (மலர்) நடராசா**

ஆண்டொன்று சென்றதம்மா
ஆறவில்லை எம்மனது
அன்புடனும் பண்புடனும்
நீங்கள் பெற்றெடுத்த பிள்ளைகள் – நாம்
உம்முகம் தேடினாலும் கிடைக்காமல்
இழக்கச் செய்தது காலம்
தேற்ற முடியவில்லை மனதை
நிஜங்களிலும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மாவின் சாந்திக்காய்
இறையடி நாடும்....

உசன்,
மிருசுவில். குடும்பத்தினர்.

## கண்ணீரில் கரைந்த
## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 . 05 . 1937

மறைவு 20 . 06 . 2008

எம் அன்புத் தெய்வம்

திருமதி

### லாசறஸ் பிலோமினம்மா (சேர்மனம்மா)

*"வாழ்நாளில் என்னை நேசித்தோரே மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்"*


பன்னிரண்டு ஆண்டுகள் பறந்தோடினாலும் பற்றியெரிகிறது
உம் நினைவலைகள் பாசத்துடன் எமை வளர்த்து பண்பினிலே
உயர வைத்து அன்பிற்கு அடைக்கலமாய்
தாய்மைக்கு இலக்கணமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
சுடர்விட்ட நீர் இன்று எமை விட்டு பிரிந்து சென்றதேனோ
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் என்றும் உம் நினைவுகளுடன்

இல. 16A, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்

கணவர்,பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 02 . 1960

மறைவு 02 . 07 . 2019

### அமரர் நடராஜா ஜெயபாலசிங்கம்

**(New Asian Center Owner,
Jaffna Technical Institute Director)**



ஆண்டொன்று சென்றதப்பா ஆதவனே உன்னை
இழந்து ஆதரவற்று தவிக்கின்றோம் ஆனாலும்
உயிர்ச்சிக்கின்றோம் ஏனெனில் வீதி தோறும்
உன் மரங்கள் வீடு தோறும் உன் கரங்கள்
எப்போதும் சொல்கின்றன " என்றென்றும்
நான் இருப்பேன் " பசுமையுடன் இவ் உலகில்

அன்னாரின் இல்லத்தில் இன்று (20.06.2020) சனிக்கிழமை ஆண்டுக்கிரியை நடைபெறும்.

New Asian Center,
56/15B Stanly Road,
Jaffna

மனைவி, பிள்ளைகள்,
சகஊழியர்கள்,
No.07 ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு

---

## 47ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



மலர்வு 10 . 10 . 1954

உதிர்வு 06 . 05 . 2020

### அமரர் கந்தப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா

கடந்த 06.05.2020 புதன்கிழமை அன்று காலமான எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட் டிக்கிரியையும் வீட்டுக்கிரியையும் 05.06.2020 வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்றன. அன்னாரின் நினைவாக நாளை (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிநிற்கின்றோம். **அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அன்னார் காலமான செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசிவாயிலாகவும் ஆறுதல் கூறி-யோருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக் கும் எமது மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

கந்தசாமி ஆசிரியர் லேன்,
கந்தரோடை, சுன்னாகம்

குடும்பத்தினர்.
021 2241 963

---

## மரண அறிவித்தல்



### திருமதி வேலுப்பிள்ளை பீற்றர் சிவபாக்கியம்

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை பீற்றர் சிவபாக்கியம் நேற்று (19.06.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பீற்றர் அவர்களின் அன்பு மனைவி யும் சந்திரகாந்தா, சந்திரகாந்தன், ரவிகாந்தன், ஜெயகாந்தன், ராஜகாந்தன், ஜீவ காந்தா, ரூபகாந்தா, சசிகாந்தா, காந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் யுவராஜ், வதனி, கலாவள்ளி, கவிதா, விஜயமாலா, மணிவண்ணன், சாந்தகுமார், இந்திர ஜித், உதயசீலன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.06.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

காந் இல்லம்
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

## இராணுவத்தின்...

இவ்வாறு ஐ.நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வோல் , ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்துள்ள வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். இலங்கை வந்து நிலைமைகளை ஆராய்ந்ததன் அடிப்படையில் இந்த அறிக்கையை அவர் தயாரித்துள்ளார்.

அதில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இலங்கையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். ஊடகங்களும் பாதுகாப்பு அமைச்சால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் கிட்டத்தட்ட எல்லா நிறுவனங்களும் கண்காணிப்புக்கு உட்பட்டு வருகின்றன. அவர்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களைப் பொறுத்து கண்காணிப்புக்களின் தீவிரத் தன்மை வேறுபடுகின்றது.

தொலைபேசி அழைப்புகளைக் கண்காணித்தல், வீடு அல்லது அலுவலகத்துக்குப் பின்தொடர்தல், உளவுத்துறைகள் ஊடாக ஒளிப்பதிவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற வகையிலும் கண்காணிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் படைத்தரப்பினர்மற்றும்உளவுத்துறையினரால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர். இவ்வாறான போராட்டங்களில் பங்கேற்போர் போராட்டங்களுக்கு முன்பும் பின்பும் அது குறித்து விசாரிக்கப்படுவதுடன், அச்சுறுத்தலுக்கும் ஆளாகின்றனர்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை உள்ளிட்ட உளவுத் துறை அதிகாரிகள் அடிக்கடி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குள் நுழைவது, கேள்விகளை எழுப்பி அவற்றின் உறுப்பினர்களை அச்சுறுத்தும் போக்கில் நடந்துகொள்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒருதன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்துக்கு இரு மாதங்களுக்குள் குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் 6 தடவைகள் விஜயம் செய்து விசாரித்துள்ளனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்பு பாதுகாப்புப் படையினருக்கும் புலனாய்வுத்துறையினருக்கும் அது குறித்து தகவல் அளிக்கவேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

நான் மேற்கொண்ட ஒரு சந்திப்பில்கூட சிவில்உடையில்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் பிரசன்னமாகியிருப்பது குறித்து சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் என்னை உஷார்படுத்தினார். சந்திப்பு நடைபெற்ற இடத்துக்கு வெளியே அந்தச் சந்திப்பில் பங்கேற்றவர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டனர்.

மற்றொரு இடத்தில் நான் பயணம் செய்த வாகனத்தின் இலக்கத்தை இராணுவத்தினர் அவதானித்துப் பதிவு செய்ததை கவனித்தேன். அச்சுறுத்தலான ஒரு சூழலை உருவாக்குவதை அடிப்படையாக் கொண்டே இவ்வாறான கண்காணிப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பேணும் சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களைப் பழிவாங்கும் செயற்பாடாகவும் இந்தக் கண்காணிப்புக்கள் கருதப்படலாம்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள், அமைதியான போராட்டங்களில் பங்கேற்பவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது தொடர்பில் கிடைக்க அறிக்கைகள் கவலை அளிக்கின்றன. இத்தகைய கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அவநம்பிக்கை மற்றும் அச்சமான சூழலை உருவாக்குகின்றது. இது சுய தணிக்கைக்கும் வழிவகுக்கின்றது என்றுள்ளது. (எ-22)

## நல்லிணக்கம்...

லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் தீர்வு ஏற்படுவது சாதாரணமான காரியமல்ல. உலகத்தில் பல்வேறு நாடுகளில் அரசியல் தீர்வு தேவைப்படுகின்றபோது அதை அடைவதில் தாமதம் ஏற்படுவது வழமை. அது புது விடயமல்ல. அரசியல் தீர்வு விடயத்தில் உறுதியாக இருந்தால் அதை நாம் அடைந்தே தீருவோம்.

அரசியல் தீர்வு வேண்டும் என்ற நோக்கில் ராஜபக்ஷ அரசு கடந்த காலத்தில் செயற்பட்டதில்லை. ஆனால், தற்போது நாட்டுக்கும் மூவின மக்களுக்கும் அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் ராஜபக்ஷ அரசு உறுதியாக இருக்கும்

இந்த நாடு சுபீட்சம் அடைய வேண்டுமென்றால் இந்த நாடு நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்றால் ஓர் அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும். இலங்கையில் அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல்வேறு உலக நாடுகள் உறுதியாக இருக்கின்றன என்றார். (எ-22)

## கோத்தா...

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்றிரவு அவர் வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு விரோதமாக ராஜபக்ஷ அரசு செயற்பட்டதால் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. அதே வருடத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்த அரசுக்கு வெளியில் இருந்து நாம் ஆதரவு வழங்கினோம். எங்களுடைய உதவியும் அந்த அரசுக்குத் தேவைப்பட்டது.

அந்த ஆட்சியில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள். புதிய அரசமைப்புக்கான பணிகள் உட்பட பல நல்ல கருமங்கள் முன்னெடுக்கப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக அந்த ஆட்சி தொடரமுடியாத நிலைமை ஏற்பட்டது. அது வேதனைக்குரிய விடயம்.

இந்தநிலையில், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷ அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அந்த அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை முடிவு எதனையும் எடுக்கவில்லை .

எனினும், நாம் நிதானமாகச் சிந்தித்து எமது மக்களின் எதிர்கால நன்மை கருதி சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்று எல்லோருடைய ஆலோசனைகளையும் பெற்று எந்த ஆட்சி மூலம் இந்த நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும் என்று நல்ல முடிவு எடுத்து அந்த முடிவின் அடிப்படையில் நாம் செயற்படுவோம்என்றார். (எ-22)

## நாகபூசணி...

தற்போது நாட்டில் உள்ள கொரோனா தொற்று நிலைமை காரணமாக நயினாதீவைச் சேர்ந்த 30 பேர் மட்டுமே திருவிழாக்களில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நயினாதீவுக்கு வெளியே வதியும் அடியவர்கள் உற்சவங்களில் கலந்துகொள்ள வாய்ப்பில்லாததால் தங்கள் இல்லங்களில் விரதம் அனுஷ்டித்து பிரார்த்தனையில் ஈடுபடுமாறு அறங்காவலர் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

## நெடுந்தீவுக்...

செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. நெடுந்தீவுக்கு அருகே பறவைத் தீவுப் பகுதியில் வைத்தே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. தமிழகத்தின் கோடிக்கரை பகுதியில் இருந்தே கஞ்சா கடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. கடத்தலுக்கு பயன்படுத்திய பைப்பர் படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது என்றும் சந்தேகநபர்கள் நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## வாளேந்திகள்...

மறித்துள்ளனர். 7 மோட்டார் சைக்கிளில் வந்தவர்களில், ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டனர். ஏனையயோர் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து வாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும், அவர்கள் சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கல்வியங்காடுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-20)

## பொலிஸாரின்...

முன்தினம் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று மீண்டும்10 மணி அளவில் குடத்தனை பகுதி வாகன உரிமையாளர்கள் மணல் விநியோக மறியல் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று, மணல் விநியோகத்தை உரிமம் பெற்று அகழ்வு மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும் மணல்காடு கிராம அபிவிருத்தி சங்கத்தினருடன் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டதால், இன்றிலிருந்து மணல் விநியோகம் வழமைபோன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

"பிரதேச மக்களுடைய வாகனங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது வாகனங்களும், யாழ் மாவட்ட பார ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் வாகனங்களும் சரிசம் அளவில் மணல் விநியோகப் பணியில் ஈடுபட வேண்டும்." என்று பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதன் போது தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொண்ட மணற்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் இனிவரும் நாட்களில் முன்னர் எவ்வாறு மணல் விநியோகம் இடம் பெற்றதோ அதேபோன்று இடம் பெறும் என ஏற்றுக் கொண்டதையடுத்து, போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

பாரவூர்தி சங்கத்தின் ஊடாக இனிமேல் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு உட்பட்ட வாகனங்களும் ,பார ஊர்திச் சங்க வாகனங்களும் சம அளவில் மணல் விநியோகத்தை மேற்கொள்வது தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது எனவும், அதனடிப்படையில் மணல் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் மாகாண பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், வாகன உரிமையாளர்க,ள் ஆகியோர் முன்னிலையில் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## அடுத்த...

டுக்குள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து நாடு படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் திரையரங்குகள் அனைத்தையும் எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் மீண்டும் திறக்க முடியும் என்று கலாசார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. சமூக இடைவெளி, தொற்றுநீக்கல் நடவடிக்கை உள்ளிட்ட இறுக்கமான பொறிமுறைகள் பேணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## சர்வதேச...

ஏற்பட்டது. எனினும் ஆட்சி மாற்றத்துக்கான பிரதிபலனை மக்கள் பெறவில்லை. இதனால் 2019ஆம் ஆண்டு மீண்டும் மக்கள் எம்மைத் தெரிவுசெய்தனர். எனினும் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முடிந்தபாடில்லை என்று தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலில் 'நல்லாட்சி' அரசின் உறுப்பினர்கள் முன்னெடுக்கும் தேர்தல் பரப்புரை குறித்து மக்கள் அதீத கவனம் செலுத்த வேண்டும். போலியான வாக்குறுதி, பலவீனமான அரச நிர்வாகம் ஆகியவை கடந்த அரசின் பெறுபேறு. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு எதிர்த்தரப்பினர் எமது செயற்பாடுகளை நாடாளுமன்றத்தில் பலவீனப்படுத்தினார்கள். இவ்வாறான நிலைமைகள் பொதுத்தேர்தலின் ஊடாக திருத்தப்படும்.

நல்லாட்சி அரசின் ஆட்சியில் மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எமது போராட்டத்தின் வெற்றியாகும். அரசியல் பின்னணியை அடிப்படையாகக்கொண்டு மாகாண சபை தேர்தல்கள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன. பொதுத்தேர்தலைப் பிற்போட எதிர்த்தரப்பினர் முன்னெடுத்த சூழ்ச்சி நீதிமன்றத்தால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதே தரப்பின் அரசியல் சூழ்ச்சியின் விளைவாகவே 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பயனை மக்கள் பெறவில்லை. 2019ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் மீண்டும் மாற்றம் ஏற்பட்டது. இருப்பினும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் ஆட்சிக்கு எதிரான தவறான குற்றச்சாட்டுக்கள் முடிவடையவில்லை - என்றார். (ம)

## அக்கராயன்...

வேண்டாம் என்று அண்மையில் 20 அமைப்புகள் இணைந்து மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மனுவொன்றைக் கையளித்திருந்தன. ஆனால் இதுவரைக்கும் எந்தப் பதிலும் கிடைக்கப்பெறாத காரணத்தினால் பிரதேச அமைப்புகள் இணைந்து இன்று கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டன. (ம-214)

## ஆணைக்குழுவில்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே ரிசாட் பதியுதீன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார். (ம)

## ஊடக அ.அட்டை விவகாரம் பாதுகாப்பு அமைச்சிடம் எந்தப் பொறுப்புமில்லை

### மறுக்கிறார் பந்துல

கொழும்பு, ஜுன் 20

ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றேன் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் செயற்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு தலையிடுகின்றது என்றும், அனைத்து விடயங்களும் இராணுவ மயப்படுத்தப்படுகின்றன எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். இதனை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.

தகவல் ஊடகத்துறை அமைச்சாலேயே ஊடகவியலாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. இவ்விவகாரத்தைக் கையாள்வதற்கு அரச தகவல் திணைக்களம் இருக்கின்றது. எனவே, இப்பணியைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை. அவ்வாறு கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து கோரிக்கையும் விடுக்கப்படவில்லை.

எனவே, போலியான கருத்துகளை வெளியிடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (க-44)

## மனநலப்பிறழ்வால் சமூகப் பாதிப்பு; இளைஞன் மருத்துவமனையில் சேர்ப்பு

பருத்தித்துறை, ஜூன் 20

பருத்தித்துறையில் உளநலம் பாதிக்கப்பட்ட நபர் பலமாதங்களாக தனக்கும் சமூகத்துக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுவந்தார் என்று தெரிவிக்கப்பட்டு பொதுச்சுகாதார பரிசோதகர் பொலிஸாரின் உதவியுடன் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்த்துள்ளார்.



பலவருடங்களாக உளநல சிகிச்சைக்கு உட்பட்டு நலமாக தொழில்செய்து வந்தநிலையில், அந்த இளைஞன் இடைநடுவே மாத்திரைகளை உள்ளெடுப்பதை தானாகவே நிறுத்தியிருந்தார். அது கட்டுப்படுத்த முடியாதளவுக்கு பிறழ்வு நடவடிக்கையில் ஈடுபடத்தூண்டியதால் அவர் தனக்கும் சமூகத்துக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திவந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பருத்தித்துறை சாரையடிப்பகுதியில் நின்று தினமும் வாகனங்கள் மீது கல்வீசித் தாக்குவது, கண்ணாடிப்பொருள்களை உடைத்து தெருவிலும் வீட்டு வாசல்களிலும் கொட்டுவது, வர்த்தக நிலையங்களைத் தாக்குவது, அரச அலுவலர்களின் அலுவலகங்களின் முன் குப்பைகளை இடுவது, பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்தின் போது குறுக்கே ஓடுவது மற்றும் தனது உடைமைகளை தீயிட்டு எரிப்பது என பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுபற்றி இவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் அவர்களால் அவரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது போனது என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே குறித்த இளைஞனினதும் சமூகத்தினதும் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் பொலிஸாருடன் இணைந்து அந்த இளைஞனை மருத்துவமனையில் சேர்த்தார்.

உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து சிகிச்சைபெற அத்தகையவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இடைவிடாது உறுதுணையாக இருந்தால் அவர்கள் ஆரோக்கியமான சாதாரண வாழ்க்கையை தமக்கும் சமூகத்துக்கும் பெறுமதியுடையதாக வாழமுடியும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (த-9)



## டிப்பருடன் சாரதி கைது

யாழ்ப்பாணம், ஜுன்20

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகாரில் அனுமதியின்றி டிப்பரில் மணல் ஏற்றினாரென டிப்பருடன் சாரதி கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். திருட்டுத்தனமாக ஏற்றப்பட்ட மணலுடன் டிப்பர் நிற்பதாகக் கிடைத்த தகவலின் படி அங்குசென்று அவரைக் கைது செய்திருந்தோம். அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். வழக்குத் தொடரப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-159)

## கல்லூரியை ஆரம்பிக்க சுகாதார ஆலோசனை

உடுப்பிட்டி அ.மி கல்லூரியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய சுகாதார நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைக் கூட்டம் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளை எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் நான்கு கட்டங்களாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்திருக்கின்றது.

இந்தநிலையிலேயே உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் மேற்கொள்ளவேண்டிய சுகாதார நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ந்டைபெற்றது. (த-108)

## மூன்று மாத மின் பாவனைக்கான ரூ. 2,000 கோடி செலுத்தப்படவில்லை

### மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 20

கொரோனா தொற்றுக் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட 3 மாத காலத்தினுள் மின்சார சபைக்கு 2 ஆயிரம் கோடி ரூபா கிடைக்க வேண்டியுள்ளது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். பாவனையாளர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து இவ்வாறு கட்டணம் கிடைக்க வேண்டியுள்ளதோடு, கட்டண பட்டியல்கள் முறையாக வழங்கப்படாததும் மானி வாசிப்போர் வீடுகளுக்குச் செல்லாமையும் இதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

இருந்தபோதும் மின்சார சபை தொடர்ச்சியாக மின்சார வசதிகளை அளித்து வருவதோடு முறையாக மின்பட்டியல் விநியோகிக்கும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளது.

மக்களின் பொருளாதார நிலைமை மற்றும் வருமான வழிகள் குறைந்துள்ள நிலையில் தவணை அடிப்படையில் கட்டணத்தை செலுத்த சலுகை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## அக்கரைப்பற்று விபத்தில் ஒருவர் சாவு; இருவர் காயம்

அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியின் சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயம் அருகில் உள்ள வளைவில் இந்த விபத்து நடந்துள்ளது. பொத்துவில் பிரதேசத்திலிலிருந்து சம்மாந்துறையை நோக்கி சென்று கொண்டிருந்த கார் சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயம் அருகில் உள்ள வளைவில் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதி ஓரங்களில் நடப்பட்டிருக்கும் வீதி பாதுகாப்பு கட்டைகளையும் உடைத்துக் கொண்டு அருகில் உள்ள சிறிய பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. (எ-ரி1)

## 3 வங்கிக் கணக்கு விவரங்கள் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு!

### கொழும்பு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜுன் 20

பெற்றிகலோ கெம்பஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான, இலங்கை வங்கியின் காத்தான்குடிக் கிளையில் உள்ள மூன்று வங்கிக் கணக்கு விவரங்களை, நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு வழங்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் முன்வைத்த விசேட கோரிக்கையை அடுத்தே, குறித்த வங்கிக் கிளையின் முகாமையாளருக்கு நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அத்துரலியே ரத்ன தேரர் 2019 ஜுன் 12 ஆம் திகதி முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெறும் இந்த விசாரணைகளில், 2016ஆம் ஆண்டு முதலாம் மாதம் 14ஆம் திகதி முதல் 2019ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 206 தடவைகளில் குறித்த கொள்ளுப்பிட்டி வங்கிக் கிளையில் உள்ள கணக்குக்கு 4,436,282,426.71 ரூபா பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தது. அத்துடன் அந்த பணத்தில் 4,436,246,122.24 ரூபா பணம் 825 தடவைகளில் அக்கணக்கிலிருந்து மீளப் பெறப்பட்டிருந்தன.

அவ்வாறு குறித்த வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில், 3,640,939,488.72 ரூபா பணம் 7 தடவைகளில் சவூதி அரேபியாவின் அப்துல்லா அல்ஜுஃபாலிஜெத்தா என்பவரால் வைப்புச் செய்யப்பட்டிருந்ததாகவும் எப்.சி.ஐ.டி. வங்கி அறிக்கையை பகுப்பாய்வு செய்து நீதிமன்றுக்கு அறிவித்திருந்தது. (ஐ)




**கடை வாடகைக்கு**

119, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள மூன்று மாடிக்
கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
021 205 1131, 077 546 1693



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.